பக்கங்கள்:-பத்து

Registered as a News paper in Sri Lanka

விலை ரூபா: 6.00

ஆசியா கண்டத்தில் முதலாம் தரத் தொழிற்சாலையில் இருந்து தயாரிக்கப்பட்டது
ராம்கோ சீமெந்து
MADRAS CEMENTS LTD
RAMCO CEMENT

# வலம்புரி
# VALAMPURI

சங்கு 04 வள்ளுவர் ஆண்டு 2034 பங்குனி 19 புதன்கிழமை (02.04.2003) தொலைபேசி~ 2223378 ஒலி 104

## ஊர்காவற்றுறை~சுருவிலில் சோக சம்பவம்

# தாயுடன் குளத்தில் குளிக்கச் சென்ற மூன்று சிறுமிகள் நீரில் மூழ்கி மரணம்!

## மயக்கமுற்ற நிலையில் தாய் மீட்பு

(யாழ்ப்பாணம்)

குளத்தில் குளித்துக் கொண்டிருந்த சமயம் நீர்ச்சுழியினால் இழுத்துச் செல்லப்பட்ட சிறுமிகள் மூவர் நீரில் மூழ்கி பரிதாபகரமாக உயிரிழந்தனர். இச் சம்பவம் நேற்று மாலை 5மணியளவில் ஊர்காவற்றுறை சுருவில பகுதியில் இடம் பெற்றுள்ளது.

ஊர்காவற்றுறை சுருவில் பகுதியில உள்ள குளம் ஒன்றில் தாயும் அவரது பிள்ளைகள் மூவரும் மற்றும் அயல்வீட்டுச் சிறுமி ஒருத்தியும் குளித்துக் கொண்டு நின்றனர். அப்பொழுது திடீரென வந்த நீர்ச் சுழி ஒன்று சிறுமிகள் மூவரையும் இழுத்துச் சென்றது.இதனால் பதற்றம் அடைந்த தாய் நீர்ச்சுழியினால் இழுத்துச் செல்லப்பட்ட தனது பிள்ளைகளைத் தேடிக் கண்டுபிடிப்பதற்காக குளத்தின் ஆழமான பகுதிக்குள் இறங்கினார்.அப்போது தாயும் நீர்ச் சுழியில் அகப்பட்டு இழுத்துச் செல்லப்பட்டார்.குளத்தில் சற்றுத் தூரத்தில் குளித்துக் கொண்டிருந்த அவரது மகனான சதீஸ்(வயது14) தனது தாயும் சகோதரிகளும் காணமல் போனதை அடுத்து வீட்டுக்கு

(10ம் பக்கம் பார்க்க)

## பொலிஸ் மா அதிபர் இன்று யாழ்.வருவார்

(யாழ்ப்பாணம்)

இலங்கை பொலிஸ் மாஅதிபர் ரி.இ.ஆனந்தராசா இன்று யாழ்.குடாநாட்டிற்கு வருகை தரவுள்ளார்.

யாழ்.வரும் இவர் காங்கேசன் துறைப் பொலிஸ் நிலையம் மற்றும் யாழ்.பொலிஸ் தலைமையகம் ஆகியவற்றுக்கு நேரடியாக விஜயம் செய்து அங்குள்ள நிலைமைகள் குறித்து ஆராயவுள்ளார்.

பொலிஸ் மாஅதிபரை வரவேற்பதற்கான ஏற்பாடுகள் யாழ்.பொலிஸ் தலைமையகத்தால் மேற் கொள்ளப்பட்டுள்ளது.

காங்கேசன்துறைப் பொலிஸ் நிலையத்தில் பொலிஸ் மாஅதிபரின் தலைமையில் முக்கிய மாநாடு ஒன்றும் இடம் பெறவுள்ளது.(இ-4)

# "லங்கா முடித்த" தாக்குதல்

# புலிகளுக்கு தொடர்பில்லை!

## கடற் புலிகளின் தளபதி சூசை தெரிவிப்பு

(நமது நிருபர்)

**திருகோணமலையில் இருந்து படையினரை ஏற்றிச் சென்ற "லங்கா முடித்த" கப்பல் தாக்கப்பட்டமைக்கும் எமக்கும் எந்த விதமான தொடர்பும் இல்லை என விடுதலைப் புலிகளின் கடற்புலிகளின் தளபதி சூசை தெரிவித்துள்ளார்,இத் தாக்குதல் சம்பவம் தொடர்பாக கிளிநொச்சியில் உள்ள விடுதலைப் புலிகளின் நடுவப் பணியகம் கவலை வெளியிட்டுள்ளதாக யுத்த நிறுத்தக் கண்காணிப்புக் குழுத் தலைவர் மேஜர் ஜெனரல் ட்றிக்வி ரெலிங்சன் தெரிவித்துள்ளார்.**

திருகோணமலையில் இருந்து சுமார் ஆயிரத்து 700 படையினரை ஏற்றிச் சென்ற "லங்கா முடித்த" கப்பல் நிலாவெளி'சம்பு'கடற் பரப்பில் நேற்று முன்தினம் திங்கட்கிழமை மாலை தாக்கப்பட்டதில் 3 படையினரும் 4மாலுமிகளும்காயடைந்திருந்தனர்.

இத் தாக்குதல் சம்பவம் தொடர்பாக கடற் புலிகளின் தளபதி சூசையுடன் கண்காணிப்புக் குழுத் தலைவர் மேஜர் ஜெனரல் ட்றிக்வி ரெலிங்சன் தொடர்பு கொண்டு கேட்ட போதே இத் தாக்குதல் சம்பவத்துக்கும் தமக்கும் தொடர்பில்லை என்றும்அவர் திட்டவட்டமாகத் தெரிவித்துள்ளார்.

இச் சம்பவம் தொடர்பாக யுத்த நிறுத்தக் கண்காணிப்புக் குழுத் தலைவர் மேலும் தெரிவித்திருப்பதாவது;

### புலிகள் இதனை செய்திருக்க மாட்டார்கள்

பாரிய ஆளணியைக் கொண்டுள்ள விடுதலைப் புலிகளின் கடற்புலி அணியினர் ஆயிரத்து 700 படையினர் சென்று கொண்டிருக்கும் பாரிய கப்பல் மீது தாக்குதல் நடத்துவதறகு தனியான ஒரு சிறிய படகை அவர்கள் அனுப்பியிருக்க மாட்டார்கள். இத் தாக்குதலானது படையினரின கப்பலை மூழ்கடிக்கும் நோக்கு

(10ம் பக்கம் பார்க்க)

## ஜனாதிபதியை உதாசீனம் செய்து அரசு ஒப்பந்தம் செய்தது

(கொழும்பு)

ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்காவின் வேண்டுகோளைப் புறக்கணித்து ஆறு பேரூந்து நிறுவனங்களின் நிர்வாகத்தை வெளிநாட்டு நிறுவனம் ஒன்றுக்குக் கையளிக்கும் ஒப்பந்தத்தில் இலங்கை அரசு நேற்று கைச்சாத்திட்டுள்ளது.

இந்த ஒப்பந்தத்தில் கையெழுத்திடுவது தொடர்பாக ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்கா அடுத்த அமைச்சரவைக் கூட்டம்வரை ஒத்தி வைக்குமாறு அரசைக் கேட்டிருந்தார். எனினும் ஜனாதிபதியின் கோரிக்கையை உதாசீனம் செய்த அரசு இந்த ஒப்பந்தத்தை நேற்று கைச்சாத்திட்டுள்ளது.இந்த ஒப்பந்தத்தின் பிரகாரம் 1419 மில்லியன் ரூபாவினை வெளி நாட்டு ஒப்பந்தகாரர்கள் உரிய நேரத்தில் வழங்காமையினால் அரசுக்கும் ஜனாதிபதிக்குமிடையில் முறுகல் ஏற்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

(வ)

## யாழ்.கோட்டைப் பகுதியில் படை முகாம் அமைக்கும் பணி மும்முரம்

## பெருமளவு சிப்பாய்கள் குவிப்பு

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் கோட்டைக்கு அருகே பாரிய படை முகாம் அமைக்கும் நடவடிக்கைகள் பெருமெடுப்பில் துரிதமாக இடம் பெற்று வருகின்றன.

குடாநாட்டு மக்களின் பலத்த எதிர்ப்புக்கு மத்தியிலும் முகாம் அமைக்கும் பணிகள் தொடருக்கின்றன.

முகாம் அமைப்பு வேலைகளுக்காகவும்,அதன் பாதுகாப்பு நடவடிக்கைகளுக்காகவும், பெருமளவு சிப்பாய்கள் நேற்றும் அங்கு குவிக்கப்பட்டுள்ளனர்.

படையினரின் இந்த நடவடிக்கையைக் கண்டித்தும் அதற்கு எதிர்ப்புத் தெரிவித்தும் குடாநாட்டு மக்கள் மறறும் பொது அமைப்புக்கள் எதிர்ப்பு நடவடிக்கைகளில் ஈடுபடத் திட்டமிட்டு வருகின்றனர்.

இதேவேளை இந் நடவடிக்கையைக் கண்டித்து விடுதலைப் புலிகளின் அரசியல் துறைப் பொறுப்பாளர் சு.ப.தமிழ்ச்செல்வன்,பாதுகாப்பு அமைச்சர் திலக் மாரப்பனவுக்கு தமது எதிர்பை கடித மூலம் வெளிப்படுத்தியுள்ளார். (இ-4)

## உடன்பாட்டுக்குப் பின்னர் 32 தமிழர்கள் கொலை

## தமிழர் உரிமை மையம் தகவல்

(நமது நிருபர்)

அரசுக்கும் விடுதலைப் புலிகளுக்குமிடையே புரிந்துணர்வு உடன்படிக்கை கைச்சாத்திடப்பட்ட நாளில் இருந்து இன்று வரை 32 அப்பாவி தமிழ்ப் பொது மக்கள் இலங்கை இராணுவத்தினாரல் கொ்ல்லப்பட்டுள்ளனர்.

ஜெனிவாவில் நடை பெற்றுக் கொண்டிருக்கும் மனித உரிமைகள் ஆணைக்குழுவின் 59வது கூட்டத்தொடரில் தமிழர் உரிமைகள் மையத்தினால வெளியிடப்பட்டுள்ள 63 பக்க அறிக்கையில் மேற் கண்டவாறு தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்த 63 பக்க அறிக்கையில் இலங்கையில் இடம் பெற்ற பல விதமான மனித உரிமை மீறல்கள் புரிந்துணர்வு உடன்படிக்கை ஏற்பட்ட பின்னர் இலங்கை இராணுவத்தினரால் கொல்லப்பட்ட பொது மக்களின் விபரங்கள் மற்றும் ஒப்பந்த மீறல்கள் சம்பவங்கள் என்பனவற்றை உள்ளடக்கியதாக இந்த அறிக்கை தயாரிக்கப்பட்டுள்ளது. (வ)

## முகாம் அமைப்பதை நிறுத்தாவிடில் 4ந் திகதி முதல் எதிர்ப்பு நடவடிக்கை

(யாழ்ப்பாணம்)

முன்னர் யாழ்.மாநகர சபைக்குச் சொந்தமான காணியில், பாரிய இராணு முகாம் அமைக்கப்பட்டு வரும் முயற்சியைக் கைவிடப்படாவிட்டால் நாளை மறுதினம் 4ம் திகதி வெள்ளிக்கிழமை ஒருங்கிணைந்த எதிர்ப்பு நடவடிக்கையை ஆரம்பிக்கப்படவுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

யாழ்.மாநகர சபைக் காணியிலும் அதனை அண்டிய பகுதிகளிலும் இராணுவத் தளம் அமைப்பதற்கு எதிர்ப்புத் தெரிவித்து பல நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகின்றன.அரசாங்கம் இந்த விடயத்தினை மீள்பரிசீலனை செய்து இராணுவ முகாம் அமைக்கும் முயற்சியை கைவிடாது போனால் எதிர்வரும் 4ம் திகதி வெள்ளிக்கிழமை ஒருங்கிணைந்த எதிர்ப்பு நடவடிக்கை

(10ம் பக்கம் பார்க்க)

# யாழ். மத்திய பேருந்து நிலையத்தில் யுத்த எதிர்ப்பு ஆர்ப்பாட்டம்

## புதிய ஜனநாயகக் கட்சி ஏற்பாடு

(யாழ்ப்பாணம்)

ஈராக் மீது அமெரிக்கா தொடுத்துள்ள ஆக்கிரமிப்பு யுத்தத்தை உடன் நிறுத்துமாறு கோரியும்,அமெரிக்காவின் எண்ணெய்க்கும்,உலக ஆதிக்கத்துக்குமான போர் வெறியை வன்மையாகக் கண்டித்தும், உலக மக்கள் நடாத்திவரும் யுத்த எதிர்ப்பு இயக்கத்திற்கு ஒருமைப்பாட்டைத் தெரிவித்தும் யாழ்.நகரில் புதிய ஜனநாயகக்கட்சி யுத்த எதிர்ப்பு ஆர்ப்பாட்டத்தை நடாத்தவுள்ளது.

எதிர்வரும் 4ஆம் திகதி வெள்ளிக்கிழமை முற்பகல் 11 மணிக்கு யாழ்.பஸ் நிலையம் முன்பாக நடைபெற இருக்கும் இவ் எதிர்ப்பு ஆர்ப்பாட்டத்தில் அனைத்து அமெரிக்க யுத்த எதிர்ப்பாளர்களையும்-சமாதானம் விரும்பும் மக்களையும்,பொது அமைப்புக்களையும் கலந்து கொள்ளுமாறு புதிய ஜனநாயகக் கட்சியின் வட பிரதேசக் குழு அழைப்பு விடுத்துள்ளது.

புதிய ஜனநாயக்கட்சியின் வட பிரதேசக் குழு இது தொடர்பான அறிகையில்,

ஈராக் மீது அமெரிக்கா தொடுத்துள்ள.ஆக்கிரமிப்பு யுத்தம் எவ்வகையிலும் ஏற்றுக் கொள்ளத்தக்க ஒன்றல்ல.உலக மன்றம் எனக் கொள்ளப்படும் ஐ.நா.சபையின் அனுமதி இன்றியும்,உலக நாடுகள் பலவற்றின் எதிர்ப்புகள் மத்தியிலும்,அமெரிக்க,பிரித்தானிய மக்கள் உட்பட உலக மக்களின் கடும் கண்டன எதிர்ப்புக்களுக்கும் ஆர்ப்பாட்டங்களுக்கும் இடையேயும் இவ் யுத்தம் நடாத்தப்படுகின்றது.

இது தனியே ஈராக் நாட்டிற்கும் மகைளுக்கும் எதிரான யுததம் மட்டுமலல, முழு மூன்றாம் உலக நாடுகளுக்கும் மக்களுக்கும் எதிரான யுத்தமுமாகும்.எனவே,இக்கொடிய யுத்தத்தை எதிர்த்து சகலரும் அணி திரண்டு எதிர்த்து குரல் கொடுக்க முன்வரல் வேண்டும் எனக் கேட்டுக் கொள்ளப்பட்டுள்ளது. (உ)

# இலங்கையில் நிரந்தர சமாதானம் ஏற்பட இறுதிச் சந்தர்ப்பம் இதுவே

## கனடா வெளியுறவு அமைச்சர் தெரிவிப்பு

(கொழும்பு)

இலங்கையில் நிரந்தர சமாதானத்தை ஏற்படுத்துவதற்கு இதுவே இறுதிச் சந்தர்ப்பம் என்பதனால் புரிந்துணர்வு ஒப்பந்தத்திற்கு அனைவரும செயல்வடிவம் கொடுத்து நடைமுறைப்படுத்த வேண்டும்.

இவ்வாறு தெரிவித்துள்ளார் கனடாவின வெளியுறவு அமைச்சர் டேவிட் கில்கோன்.

இது தொடர்பாக அவர் தொடர்ந்தும் கருத்துக் கூறுகையில்;

இலங்கையில் தற்போது முன்னெடுக்கப்பட்டு வரும் சமாதான முயற்சிகள் மிகச்சிறந்ததும் உறுதியானதுமாகும்.இதனை இலங்கையர்கள் மட்டுமன்றி ஏனைய நாட்டவர்களும் உணர வேண்டும்.சமாதான முயற்சிகளை இலங்கையில் உள்ள குறிப்பிட்ட சில தீய சக்திகள் குழப்ப முற்படுகின்றன. இதனை ஒரு போதும் அனுமதிக்கக் கூடாது.

சமாதானத்தைக் குழப்பி மீண்டும் ஓர் யுத்தத்தை ஏற்படுத்தி அதன் மூலம் ஏற்படப் போகும்பாரிய உயிர் இழப்புக்களைச் சந்திக்க விரும்பும் சமாதான விரோதிகளை எவரும் மன்னிக்கமாட்டார்கள்.

எனவே,இலங்கையில் வாழும் அனைத்து இன மக்களும் தற்போது முன்னெடுக்கப்பட்டு வரும் சமாதான் முயற்சிகளுக்கு ஆதரவளிக்க வேண்டும்.

அதேவேளை இலங்கை நாட்டில் நிராந்தர சமாதானத்தை ஏற்படுத்தி சகல மக்களும் சம உரிமையுடன் வாழ பிற நாடுகளும் ஒத்துழைப்பை வழங்க வேண்டும் என்றும் கேட்டுக் கொண்டார். (உ-10)

## தொடர்பு கொள்க

(யாழ்ப்பாணம்)

கீழே பெயர் குறிப்பிட்டவர்களை செஞ்சிலுவைச் சர்வதேசக் குழுவுடன் தொடர்பு கொள்ளுமாறு கேட்கப்பட்டுள்ளது.

ஞானமலர் நாகராசா-498 நாவலர் வீதி , யாழ்ப்பாணம், ஜெயந்தி ஸ்ரீமுருகேசமூர்த்தி-மே.பா.திருமதி பி.நடராசா மணியங்காடு,கொக்குவில் மேற்கு,ஆர்.காளிராசன்-சாந்தி அரிசி ஆலை,கோணடாவில் கிழக்கு,தியாகராசா ஜெகதாம்பாள்-210,6ஆம் குறுக்குத்தெரு,மணியந்தோட்டம்,கொழும்புத்துறை,பிரான்சிஸ் அம்மா- 42 பழைய பூங்காவீதி, யாழ்ப்பாணம்,செல்லையா நாகராசா-காசிப்பிள்ளை கோவிலடி தெல்லிப்பளை. (உ)

## தரம்-5புலமைப் பரிசில் பயிற்சி வினாத் தாள்.....

* கீழ்வரும் அட்டவணையை நிரப்புக

| விலைப்பட்டியல் | பொருட் பட்டியல் | அளவு | பெறுமதி | செலுத்திய பணம் | மீதி |
|---|---|---|---|---|---|
| 66. 1kg சீனி 35.00 | சீனி | 150g | | 10.00 | |
| 67. 500ml எண்ணெய் 17.50 | எண்ணெய் | 2L | | | 30.00 |
| 68. 1டசின் பென்சில் 30.00 | பென்சில் | 3 | | | 2.50 |
| 69. 10 பிடி கீரை 15.00 | கீரை | 3 | | 5.00 | |
| 70. 1/2m சீத்தை 45.50 - | சீத்தை | 2 3/4m | | 250.25 | |
| 71. 1றீம் பேப்பர் 200.00 | பேப்பர் | 50பேப்பர் | | | 0.00 |
| 72. 50g தேயிலை 7.50 | தேயிலை | 450g | | 70.00 | |
| 73.1/4 l பெற்றோல் 19.50 | பெற்றோல் | 5L | 390.00 | | 10.00 |
| 74. 10 cm நாடா 1.50 | நாடா | 1 1/2m | | 25.00 | |
| 75. 4தேசிப்பழம் 3.00 | தேசிப்பழம் | 1டசின் | | | 1.00 |

*சந்தை என்னும் தலைப்பின் கீழ் சரியான எழுவாய் பயனிலையுடன் கூடிய 6 வாக்கியங்கள் எழுதுக. ஒவ்வொரு வாக்கியமும் குறைந்தது நான்கு சொற்களையாவது கொண்டிருக்கவேண்டும்.


## மாநகரசபை - யாழ்ப்பாணம்

### அறிவித்தல்

யாழ்ப்பாணம் மத்திய பஸ்நிலைய பகுதியின் சுற்றாடலிலும் மற்றும் ஏனைய இடங்களிலும் உள்ள நடைபாதையில் வைத்து பொருட்களை விற்பனை செய்ய வேண்டாம் எனவும், முனீஸ்வரன் வீதியில் இதற்கென ஒதுக்கப்பட்ட இடத்தில் வைத்து விற்பனை செய்யுமாறும் கேட்டுக் கொள்கின்றேன்.

இவ்வறிவித்தலையும் மீறி விற்பனை செய்பவர்கள் மீது சட்ட நடவடிக்கை எடுக்கப்படும் என்பதை இத்தால் அறியத்தருகின்றேன்.

மாநகரசபை,
யாழ்ப்பாணம். (C/5897)

இ.இராமலிங்கம்
மாநகர ஆணையாளர்


## இயக்கச்சி பாடசாலை இயங்குகிறது

(தனங்கிளப்பு)

கடந்த கால வன்முறைகளின் போது சேதமடைந்து இயங்க முடியாத நிலையில்இருந்த இயக்கச்சி அ.த.க. பாடசாலை மீண்டும் இயங்க ஆரம்பித்துள்ளது.

இதேவேளை, இப்பகுதி மாணவர்களின் நலன் கருதி மீண்டும் இயங்கிவரும் இப் பாடசாலை தற்காலிகமாக அமைக்கப் பட்ட கொட்டகையில் தளபாடவசதி ஏதுமின்றி காணப்படு கின்றமையினையடுத்து புதிய கட்டடங்களை அமைக்கவும் மேற்படி பாடசாலையை புனரமைக்கவும் நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது. (உ-37)

# செய்தித்துளிகள்

## பரிசளிப்பு விழா

(யாழ்ப்பாணம்)

யா/ உரும்பிராய் இந்துக் கல்லூரியின் வருடாந்த பரிசளிப்பு விழாவும் தாபகர் தினமும் புனரமைக்கப் பட்ட கலையரங்கத் திறப்பு விழாவும் நாளை 3 ஆம் திகதி வியாழக் கிழமை பி.ப 2 மணிக்கு கல்லூரி திறந்த கலையரங்கத்தில் அதிபர் அ. ஈஸ்வரநாதன் தலைமையில நடைபெறவுள்ளது.

விழாவில், பிரதம விருந்தினராக லண்டன் உ.இ.க பழைய மாணவர் சங்கத் தலைவர் மு.து. செல்வராஜாவும் சிறப்பு விருந்தினராக யாழ். வலயப்பிரதிக் கல்விப் பணிப்பாளர் யோ. ரவீந்திரனும், கெளரவ விருந்தினர்களாக கோப்பாய்க் கோட்ட உதவிக் கல்விப்பணிப்பாளர் இ.சிவஞானசுந்தரம், வலி கிழக்கு அரசியல் துறைப் பொறுப்பாளர் எஸ். யாழவன் ஆகியோரும் கலந்து கொள்ளவுள்ளனர். (உ)

## அடிப்படை வசதி ஏற்படுத்தக் கோரிக்கை

(திருநெல்வேலி)

கைதடி நாவற்குழி தெற்கு கிராமம் மிகவும் பின்தங்கியதாக அடிப்படை வசதிகள் ஏதுமற்றுக் காணப்படுவதனால் இக் குறைபாடுகளை நிவிர்த்தி செய்யும் வகையில் மலசலகூட வசதியினை யாவது ஏற்படுத்தித் தருமாறு கைதடி நாவற்குழி தெற்கு மாதர் கிராம அபிவிருத்திச் சங்கம் யாழ். மாவட்ட அரசாங்க அதிபரை கேட்டுள்ளது. (உ-43)

## கூட்டம்

(யாழ்ப்பாணம்)

இலங்கைச் செஞ்சிலுவைச்சங்கக கோப்பாய்பிரிவு நடத்திய பத்திரிகையாளர் பயிற்சி நெறியில் பங்கேற்று இறுதிப் பாட்சைக்குத் தோற்றியவர்களுக்கான சான்றிதழ வழங்குவது தொடாபான கூட்டம் எதிர் வரும் 6 ஆம் திகதி ஞாயிற்றுக் கிழமை முற்பகல் 10.00 மணிக்கு கோப்பாய் மகாவித்தியாலயத்தில் இடம்பெறவுள்ளது. (உ-43)

## கோழிக்குஞ்சு விநியோகம்

(பருத்தித்துறை)

பருத்தித்துறை கால்நடை வைத்திய அதிகாரி அலுவலகத்தில் வைத்து எதிர்வரும் 14ஆம் திகதி நல்லினக் கோழிக்குஞ்சுகள் விநியோகிக்கப்படவுள்ளன.

அவ்வாறு கோழிக் குஞ்சுகளைப் பெற்றுக் கொள்ள விரும்புபவ்கள் முன் கூட்டியே மேற்படி அலுவலகத்தில் பதிவு செய்து கொள்ளுமாறும் அறிவிக்கப்பட்டுள்ளது. (உ-52)

## தீர்க்க தரிசனச் செய்தி

(யாழ்ப்பாணம்)

தீர்க்கதரிசனச் செய்தியாளர் சகோதரன் டானியல் (ஜேர்மனி) பங்கேற்கும் தீர்க்கதரினச் செய்தியும் விடுதலையாகும்

ஜெபமும் இன்று முதல் தொடர்சசியாக நான்கு தினங்கள் மாலை 4 மணி தொடக்கம் யாழ்.துரையப்பா விளையாட்டரங்கில் இடம் பெறவுள்ளது. (உ)

## குருநகர் கடற்கரை வீதி புனரமைப்பு

(குருநகர்)

வீதி அபிவிருத்திப் பொறியியலாளர் அலுவலகத்திற்கு நேரில் சென்று, குருநகர் முன்னேற்ற ஐக்கிய முன்னணித் தலைவர் கி. கிறிஸ்தோப்பர் கேட்டுக் கொண்டதற்கு இணங்க குருநகர் கடறகரை வீதிப் புனரமைப்பு வேலைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

எதிர்வரும் 11ஆம் திகதி வெள்ளிக் கிழமை தவக்காலத்தை ஒட்டிய சிலுவைப்பாதை வீதி ஆராதனை மேற்படி வீதியால் நடைபெறுவதற்கு முன்னதாக வீதியைப் புனரமைப்புச் செய்யுமாறு கேட்டுக் கொண்டதற்கு இணங்கவே புனரமைப்பு வேலைகள் துரித கதியில் நடைபெற்று வருகின்றன. (உ-74)

## சைவப் புலவர் எழுச்சி விழா

(யாழ்ப்பாணம்)

அகில இலங்கை சைவப்புலவர் சங்கத்தின் 43 வது ஆண்டு நிறைவு விழாவும் சைவப்புலவர் எழுச்சி விழாவும் எதிர்வரும் 6 ஆம் திகதி ஞாயிற்றுக் கிழமைகாலை 9.00 மணிக்கு வண்ணை நாவலர் மகா வித்தியாலயத்தில் சைவப் புலவா மு. திருஞானசம்பந்தப்பிள்ளை தலைமையில் நடைபெறவுள்ளது.

நிகழ்வில் முதன்மை விருந்தினராக இந்துசமய விவகார அலுவல்கள் அமைச்சர் தி.மகேஸ்வரனும் கௌரவ விருந்தினர்களாக யாழ். மேலதிக அரசாங்க அதிபர் பத்தினியம்மா திலகநாயகம்,யாழ்.பல்கலைக் கழக கலைப் பீடாதிபதி பேராசிரியர் ப. கோபாலகிருஷ்ண ஐயர் ஆகியோரும் கலந்து கொள்ளவுள்ளனர்.

அருளுரையினை நல்லை ஆதீன முதல்வர் ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தர ஞானசம்பந்த பரமாச்சாரிய சுவாமிகள் நிகழ்த்தவுள்ளார். (உ)

## அலுவலகம் மாற்றப்பட்டுள்ளது

(யாழ்ப்பாணம்)

ஜீ.ரி.சற் நிறுவனத்தின் யாழ். அலுவலகம் புதிய இடத்திற்கு மாற்றப்பட்டுள்ளது.தற்போது 472,பிரதான வீதி,யாழப்பாணம். எனும் முகவரியில் இந் நிறுவனம் இயங்கி வருகின்றது. அதன் புதிய தொலை பேசி இலக்கங்கள் 222 2635, 222 6011 என அறிவிக்கப்பட்டுள்ளது. (இ)

## கலந்துரையாடல்

(யாழ்ப்பாணம்)

இரண்டாவது உலக இந்து மாநாடு தொடர்பான பிராந்தியக் குழுவின கலந்துரையாடல் ஒன்று, இன்று பிற்பகல் 4மணிக்கு யாழ்.பல்கலைக் கழக கலைப் பீடாதிபதியின் பணிமனையில் பேராசிரியர் ப.கோபால கிருஸ்ண ஐயர் தலைமையில் நடைபெறவுள்ளது.

வரும் மே மாதம் 2ம் திகதி தொடக்கம் 6ம் திகதி வரை கொழும்பில் நடை பெறவுள்ள 2வது உலக இந்து மாநாட்டின் பின்னர் இது தொடர்பான பிராந்தியமாநாடு யாழ்ப்பாணத்தில் நடை பெறவுள்ளது.

இதில் கொழும்பில் நடை பெறவுள்ள மாநாட்டில் பங்கு பற்றும் வெளிநாட்டு அறிஞர்களும்,கலைஞர்களும் கலந்து கொள்வுள்ளனர். (ந-5)


## யாழ்ப்பாண மாநகரசபை

### அறிவித்தல்

யாழ்ப்பாண மாநகரசபையின் எல்லைக்குட்பட்ட பகுதிகளில் சபையின் அனுமதி பெறாது விளம்பரம் செய்பவர்கள் அவ்விளம்பரங்களை உடன் அகற்றி சபையின் அனுமதி பெற்று விளம்பரம் செய்யுமாறு கேட்டுக் கொள்ளப்படுகின்றீர்கள்.

ஏற்கனவே 2002ஆம் ஆண்டில் அனுமதி பெற்றவர்கள் சபையுடன் தொடர்பு கொண்டு அவ்வனுமதியை புதுப்பித்துக் கொள்ளுமாறு கேட்கப்படுகிறீர்கள்.

சபையின் அனுமதியின்றி விளம்பரம் செய்வது சட்ட விரோதமானதாகையால் அனுமதியற்றவிளம்பரங்களை அகற்ற நடவடிக்கை எடுக்கப்படும் என்பதை அனைவரது தகவலுக்கு கொண்டுவரப்படுகின்றது.

(C/5898)

இ.இராமலிங்கம்
ஆணையாளர்,
யாழ்ப்பாண மாநகர சபை

# ஜப்பானியப் பிக்குமார் குழு யாழுக்கு நேற்று ஆன்மீக விஜயம்

## பௌத்த கலாசார முறைப்படி வரவேற்பு

(யாழ்ப்பாணம்)

இலங்கைக்கு ஆன்மீக யாத்திரை மேற்கொண்டுள்ள16 பேர் கொண்ட ஜப்பானிய பிக்குமார் குழுவொன்று நேற்று யாழ்ப்பாணத்திற்குவிஜயம் செய்திருந்தது.

வணக்கத்திற்குரிய இக்கோகுச்சி இக்கொய்ஸ் தலைமையில் வருகை தந்த இப் பிக்குமார்குழு, அலங்கரிக்கட் பட்ட யானை முன் செல்ல மிதிவண்டிச் சாகசவீரர்கள்,சாட்டையடி சாகச வீரர்கள், ஆதிவாசிகளின் நடனம் சகிதம் றபான முழக்கத்துடன் மலர்தூவி பாரம்பரிய பௌத்த முறைப்படி யாழ். நாகவிகாரைக்கு பருத்தித்துறை- யாழ்.வீதி வழியாக அழைத்து வரப் பட்டனர்.

இதனால், ஆரியகுளம் சந்திப் பகுதியூடான போக்குவரத்து சில மணிநேரம் தடைப்பட்டிருந்தது.

வணக்கத்திற்குரிய சரண்டாதேரா 512 வது படையணித் தளபதி சில்வா உட்பட, இராணுவத்தளபதிகள் மறறும் படை வீரர்கள் பெருமளவில் புடைசூழ அழைத்து வரப்பட்ட இந்த ஜப்பான் பிக்குமார் குழு, யாழ்.நாக விகாரையில் ஆராதனையில் ஈடுப்ட்டதுடன் சமய நிகழ்வுகளும் அங்கு தொடர்ந்து இடம்பெற்றன.

தொடர்ந்து இக்குழு நல்லூர் கந்தசுவாமி கோயில்,யாழ்.பெரிய பளளிவாசல் ஆகியவற்றிலும் இறை தரிசனம் செய்ததுடன், யாழ். கோட்டை, துரையப்பா விளையாட்டரங்கம், யாழ். பொது நூலகம் என்பவற்றைப்பார் வையிட்டு பின்னர்,கந்தரோடையில் உள்ள பௌத்த வரலாற்றுச் சின்னம், காங்கேசன்துறை,கீரிமலை ஆலயங்கள் ஆகியவற்றையும் தரிசித்து நேற்றைய தினமே இவர்கள் கொழும்பு திரும்பி யமை குறிப்பிடத்தக்கது. (உ-4)

# கூட்டமைப்பு எம்.பிக்கள் நேற்று பிரதமரைச் சந்தித்துப் பேச்சு

## இன்று பாதுகாப்பு அமைச்சரைச் சந்திக்க ஏற்பாடு

(கொழும்பு)

தமிழ்க் கூட்டமைப்பு நாடாளுமன்ற உறுப்பினர்கள் நேற்றைய தினம் பிரதமர் ரணில் விக்கிரம சிங்கவைச் சந்தித்துக் கலந்துரையாடியுள்ளனர்.

யாழ். நகரின் கேந்திர முக்கியத் துவம் வாய்ந்த இடங்களை உள்ளடக்கி பாரிய முகாம் அமைக்கும் முயற்சி யில் படையினர் அவசரஅவசரமாக ஈடுபட்டு வருவது குறித்தும் அதனைத் தடுத்து நிறுத்தவேண்டியதன் அவசி யம் குறித்தும் இச் சந்திப்பில் பிர தானமாகப் பேசப்பட்டது.

நேற்று மு.ப. 10 மணியளவில் பாராளுமன்றக்கட்டடத்தில் ஆனந்த சங்கரி எம்.பி தலைமையில் இடம் பெற்ற இந்தச் சந்திப்பின் போது, அ.விநாயகமூர்த்தி,ஜி.ஜி. கஜேந்திர குமாா,இராசம்பந்தன்,மாவைசேனா திராஜா,கிருஷ்ணசாமி, என்.ரவிராஜ் செல்வம் அடைக் கலநாதன், ராஜபுவனேஸ்வரன், தங்கவடிவேல், எம். துரைரட்ணம், யோசப் பரராஜசிங் கம்ஆகியோர் பிரசன்னமாகியிருந் தனர்.

மேற்படி முகாம் அமைப்பது தொடர்பாக கூட்டமைப்பினர் பிரத மரிடம் சுட்டிக்காட்டியபோது,அது தற்காலிக முகாம் மட்டுமே என அவர் கூறியதாகவும் இதனை மறுத்த கூட்டமைப்பினர் அது நிரந்தரமா னதும் பாரியதுமான முகாம் என்பதை தக்க ஆதாரங்களுடன் கூறியதை யடுத்து,இது விடயமாக பாதுகாப்பு அமைச்சருடன் பேசுவதற்கு பிரதமரால் ஒழுங்கு செய்யப்பட்டுள்ளதாகவும் ஜி.ஜி.கஜேந்திரகுமார் எம்.பி. தெரி வித்தார்.

இதேவேளை, இன்று மு.ப. 10 மணியளவில் பாதுகாப்பு அமைச்சர் திலக் மாரப்பனவைச் சந்திக்கவுள்ள கூட்டமைப்பினர்,

யாழ். நகரப்பகுதியில் பொதுமக் களின் 80 வீடுகள் மற்றும் 3 விடுதிகளில் இருந்து படையினர் வெளியேறுமிடத்து,தற்போது தெரிந் தெடுக்கப்பட்டுள்ள இடத்தைத் தவிர்த்து பொதுமக்களுக்கு இடைஞ்சலை ஏற்படுத்தாத ஓர் இடத்தினைத் தெரிவு செய்வது தொடர்பில் பாதுகாப்பு அமைச்சர் மற்றும் அவரது குழுவினரை யாழ்ப்பாணத்துக்கு நேரில் விஜயம் செய்து,பொது அமைப்புக்கள் மற்றும் கல்வி மான்களுடன் கலந்துரையாடு மாறு அழைப்பு விடுக்கவுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகிறது. (உ-43)

## பேராசிரியர் பாலசுப்பிரமணியம் விருது

# பேராசிரியர் ஜான்ஸீக்கு வழங்கிக் கௌரவிப்பு

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாண விஞ்ஞானசங்கத்தின் 11வது வருடாந்த அமர்வுகள் இன்று புதன்கிழமை ஆரம்பமாகி மூன்று நாட்கள் நடைபெறவுள்ளன.

கடந்த ஆண்டு ஆரம்பிக்கப்பட்ட பேராசிரியர் கந்தையா பால சுப்பிரமணியம் தங்கப்பதக்க விருது மரவள்ளி மற்றும் பனை சம்பந்தப்பட்ட பல சர்வதேச அங்கீகாரம் பெற்றஆய்வுகளை மேற் கொண்ட உயிர் இரசாயன வியற் பேராசிரியர் ஈ.ஆர்.ஜான்ஸ அவர்களுக்கு இவ்வாண்டு வழங்கப்படுகிறது.

ஸ்ரீ ஜயவர்த்தனபுர பல்கலைக்கழக உயிர் இரசாயனவியற் துறைத் தலைவரான பேராசிரியர் ஜான்ஸ் அவர்கள் பனை சம்பந்தப்பட்ட தலை சிறந்த சர்வதேச அங்கீகாரம் பெற்ற பல ஆய்வுகளை மேற்கொண்டவர். இலங்கையிலுள்ள தலைசிறந்த சர்வதேச தரமிக்க ஆராய்ச்சியாளர்கள் வரிசையில் ஒருவர். இவரின் ஆராய்ச்சிக் கட்டுரைகள் உலகில் தலை சிறந்த சஞ்சிகை களில் வெளிவந்துள்ளன.

எமது நாட்டில் விவசாயம்சார் தொழிற்சாலைகளை உருவாக்கக்கூடிய வகையில் இவரது ஆய்வுகள் அமைந்துள்ளன.

பனை அபிவிருத்திச்சபையுடன் சேர்ந்து, பனை சம்பந்தப்பட்ட பல ஆய்வு களை மேற்கொண்டுள்ளார். பனையுடன் மட்டும் இவரது ஆய்வுகள் அமையவில்லை. மரவள்ளி மற்றும் இலங்கையில் உற்பத்தியாகும்தானிய வகைகள் பற்றியும்இவர் பல ஆய்வுகளை மேற் கொண்டுள்ளார்.

பனையிலிருந்து பெறப்படும் ஒடியல், புளுக்கொடியல்மாவிலும், பனம் களியிலும் காணப்படும் கயர்ப்புத் தன்மைக்குக் காரணமான பிளபெல்லி பெறின் (Flabelliferin)பதார்த்தத்தை கண்டு பிடித்து, அதைப்பிரித் தெடுக்கும் பணியில் இவர் ஈடுபட்டு வெற்றியும் பெற்றார்.பனம் களியில் இருந்து ஜாம், கோடியல், பனம்பானம் போன்றவற்றைத் தயாரிக்க இவரது ஆராய்ச்சிகளே உதவின.நுண்ணுயிர்களின் வளர்ச்சியைத் தடுக்கக்கூடிய சக்தி இந்த பிளபெல்லிபெறின் என்ற பதார்த்தத்துக்கு உள்ளதென இவரது ஆய்வு கள் நிரூபித்தன. இப்பதார்த்தம் பல நோய்களை ஏற்படுத்தும் பற்றீரி யாக்களின் (Bacteria) வளர்ச்சியை நுண்ணுயிர்க் கொல்லிகளைப் போல (Antibiatics) தடுக்கக்கூடிய சக்தி வாய்ந்நது.பனங்களியில் இருந்து அற்கோல் தயாரிக்கவும் இவர் ஆய்வு மேற்கொண்டு வெற்றிபெற்றார். பனம ஒடியல், புழுக்கொடியல் மாவிலிருந்து தூய மாபபொருளை(purified - starch) தயாரிக்கும ஆய்விலும் இவர் வெற்றியீட்டினார். தூய மாப்பொருளிலிருந்து இனிப்பு, சொக்லேட் தயாரிப்புக்குத் தேவையான திரவ குளுக்கோசையும் பெறமுடியும்.

காயப்பட்ட மரவள்ளியில் ஏற்படும் நஞ்சுத்தன்மைக்குக் காரண மான பதார்த்தத்தை (cyanogenic glucoside) பிரித்தெடுத்தல், நஞ்சுத் தனமையை நீக்குதல் போன்ற சம்பந்தப்பட்ட பலஆய்வுகளையும் இவர் மேற்கொண்டு வெற்றிபெற்றார். மரவள்ளியிலுள்ள மாப்பொரு ளைப்பிரித்தெடுத்து (Purifiedstarch) அதை வேறுபல பொருட்களின் உற்பத்திக்குட் பயன்படுத்த இவரது ஆய்வுகள உதவின.

பேராசிரியர் ஜான்ஸ் அவர்களின் ஆய்வுகள் உளளூரிலும் சர்வதேச மட்டத்திலும் பல பயன்பாடுகளைத் தோற்றுவித்தி ருக்கின் றன. இவரது ஆய்வுகள் எமது பனைவளத்தை மையமாகக் கொண்டமைந்தமைஎமக்கு குறிப்பாக வடக்கு-கிழக்குமக்களுக்கு ஒரு வரப்பிரசாதமாக அமைந்துள்ளது.

யாழ்ப்பாண விஞ்ஞான சங்கம். கலாநிதி அ .செந்துரன
பொதுச் செயலாளர்

## வருடாந்த ஆண்டமர்வு

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாண விஞ்ஞானச்சங்கத் தின் வருடாந்த ஆண்டமர்வு இன்று காலை 8.30 மணிக்கு யாழ். பல்கலைக் கழகத்தில் ஆரம்பமாகவுள்ளது.

இவ் ஆண்டமர்வில் பிரதம விருந் தினராக ஜெயவர்த்தனபுர பல்கலைக் கழகத்தின் உயிரியல் இரசாயனத் துறைத்தலைவர் பேராசிரியர் ஜான்ஸ் கலந்துகொள்ளவுள்ளார்.

இவ் ஆண்டமர்வு தொடர்ந்து எதிா வரும வெள்ளிக்கிழமை வரை இடம் பெறவுள்ளது. (உ-10)

## வேலைத்திட்டங்கள்

(கொழும்பு)

சர்வதேச குடியேற்ற அமைப்பு இலங்கையில் பல வேலைத் திடடங் களை நடைமுறைப்படுத்த நட வடிக்கை எடுத்திருப்பதாக உள்துறை அமைச்சர் ஜோன் அமரதுங்க தெரிவித் துள்ளார்.

இத்திட்டங்களின்படி எதிர்காலத் தில் குடியேற்ற முகாமைத்துவம் தொடர் பான பல கொள்கைத்திட்டங்கள் ஆரம் பிக்கப்படவுள்ளன.

ஐரோப்பிய ஒன்றியத்தின் உதவியு டன் நடைமுறைப்படுத்தப்படும் இவ் வேலைத்திட்டத்துக்காக சுமார் 50 ஆயிரம் அமெரிக்க டொலர்செலவா கும்எனகணிப்பிடப்பட்டுள்ளது.(உ-8)

## பாதாள உலக நபர் கைது

(கொழும்பு)

கொழும்பு மாநகர சபை உறுப் பினர் சுரேஸ் பலில் கொலை வழக்குத தொடர்பாக தேடப்பட்டு வந்த பாதாள உலகக் கோஷ்டியின் முக்கிய நபர் ஒருவர் நேற்று அதிகாலை வாழைத் தோட்டப் பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளார்.

இந் நபரிடம் இருந்த இருதுப் பாக்கிகளும் கைப்பற்றப் பட்டன. கடந்த வருடம் ஓகஸ்ட்மாதம் மேற்படி கொழும்பு மாநகரசபை உறுப் பினர், கொழும்பு புறக்கோட்டையில் வைத்து சுட்டுக் கொல்லப்பட்டமை குறிப்பிடத்தக்கது. (உ-8)

## ஜப்பான் பிக்குகள் யாழ். வருகை



இராணுவத்தளபதி சில்வா பிரதம பிக்குவை அழைத்து வருகிறார்.







பௌத்த கலாசாரப்படி பிக்குகள் அழைத்து வரப்படுகின்றனர்.



யாழ். நாக விகாரையில் ஜப்பானிய பிக்குகள் ஆராதனையில் ஈடுபடுகின்றனர். படங்கள் க.பவன்

# சதாமின் ஆட்சியை ஒழித்து ஈராக்கிய மக்களை விடுவிக்கும் வரை அமெரிக்கா ஓயப்போவதில்லை

## அதிபர் புஷ் மீண்டும் சூளுரை



(வாஷிங்டன்)

**ஈராக்கை சதாம் ஹுசைனின் பிடியில் இருந்து விடுவிக்கும் வரை அமெரிக்கா ஓயப்போவதல்லை என்று அதிபர் ஜோர்ஜ் டபிள்யு புஷ் நேற்று மீண்டும் சூளுரைத்தார்.**

**ஈராக்கிய மக்களுக்கு அவர் விடுத்த ஒரு அறிக்கையில் ''நாங்கள் பெரும் சக்தி வாய்ந்த படைகளுடன் வருகிறோம். உங்களை உங்கள் அதிபரின் ஆட்சியிலிருந்து விடுவிக்கும் வரை தயங்க மாட்டோம் , ஓயமாட்டோம்என்று உறுதியளித்தார்.**

இதேசமயம், ஈராக்கிய தகவல் துறை அமைச்சர் தாகெக் அஸிஸ் ஈராக்கிய தொலைக்காட்சியில் தோன்றிப் பேசுகையில், அந்நிய படைகள் ஈராக்கை விட்டு நிபந்தனைகளின்றியும் முழுமையாகவும் வெளியேற வேண்டும். அதுவரை கூட்டுப்படைகள் மீதான தாக்குதல் நிற்கப் போவதில்லையென்று கூறினார்.



ஈராக்கிய தொலைக்காட்சியில் அதிபர் சதாம் ஹுசைன் இரகசிய கூட்டமொன்றில் தமது இரு புதல்வர்களுடன் அமர்ந்திருப்பது காட்டப்பட்டது.

தமது குடும்பத்தைச் சேர்ந்த எவரும் நாட்டை விட்டு வெளிநாட்டுக்கு ஓடி விடவில்லையென்று அதிபர் ஹுசைன் கூறியதாகவும் அறிவிக்கப்பட்டது.

ஈராக்கிய தலைநகர் பக்தாத் மீதும் முக்கியத்துவம் வாய்ந்த வேறு நகரங்கள் மீதும் நேற்று தொடர்ந்து கூட்டுப்படைகள் விமானங்கள் குண்டுகளை வீசி தாக்குதல் நடத்தின.

டைகிரஸ் நதியின் கரையிலுள்ள அதிபர் சதாம் ஹுசைனும் அவரது சகபாடியும் பயன்படுத்தும் கட்டடம் ஒன்றும் தகர்க்கப்பட்டதாக கூட்டுப் படை தரப்பில் அறிவிக்கப்பட்டது.

ஈராக்கிய மக்களுக்கு அதிபர் புஷ் விடுத்த செய்தியில் ''நாங்கள் வருகிறோம், சக்தி வாய்ந்த பெரும் படையுடன் வருகிறோம். உங்கள் அதிபரின் ஆட்சி அதிகாரத்திலிருந்த உங்களை விடுவிக்கும் வரை நாங்கள் ஓயப்போவதில்லை. உங்களுக்காக உணவு, மருந்து, மற்றும் பொருட்களைக் கொண்டு வருகிறோம். உங்களை விடுவிக்கும் வரை நாங்கள் ஓயப் போவதில்லை என்று கூறினார்.



### சிரியா மீது பவல் குற்றச்சாட்டு

ஈராக்கிற்கு ஆயுதங்கள் வழங்கி வருவதாக சிரியாவை அமெரிக்க இராஜாங்க அமைச்சர் கொலின் பவல் குற்றஞ்சாட்டியுள்ளார். இதனால் ஏற்படும் விளைவுகளுக்கு சிரியாவே பொறுப்பேற்க வேண்டும் என்றும் அவர் கூறியுள்ளார்.

இதேசமயம், பேரழிவு ஆயுதங்களை ஈராக்கியர் சிரியாவில் கொண்டு போய் மறைத்து வைத்திருக்கும் சாத்தியமிருப்பதாக இஸ்ரேல் கூறியுள்ளது.

### பாதுகாப்பு சபையை அவசரமாகக் கூட்ட கோரிக்கை

ஈராக் நிலைமை பற்றி ஆலோசிக்க ஐ.நா பாதுகாப்பு சபையை அவசரமாகக் கூட்டும் படி அரபு நாடுகளுக்கு இஸ்லாமிய நாடுகளும் கோரிக்கை விடுத்துள்ளன. (பி)

## யு-எஸ் எரிவாயு ஆலையை தகர்க்க அல்கெய்டா சதி

(நியுயோர்க்)

அமெரிக்காவில் எரிவாயு உற்பத்தி ஆலையையும் பாலங்களையும் தகர்க்க அல்கெய்டா இயக்கம் சதித் திட்டம் தீட்டியது தெரிய வந்துள்ளது.

நியுயோர்க் இரட்டை கோபுரங்கள் தகர்க்கப்பட்ட அதே நாளில் இந்தச் சதி வேலைகளும் நடத்தத் திட்டமிடப்பட்டிருந்தது.

சமீபத்தில் பிடிப்பட்ட காலித் ஷேக் முகமது, அமெரிக்காவின் சி.ஐ.ஏ உளவு அமைப்பினரிடம் இத்தகவல்களைத் தெரிவித்ததாகவும், மேலும் சில ரகசிய சதித் திட்டங்களைத் தெரிவிக்க விரும்புவதாகவும் கூறியுள்ளார். அவர் தானே இவ்வாறு கூற முன் வந்துள்ளது குறித்து அமெரிக்க உளவு அமைப்பு வியப்பு தெரிவித்துள்ளது.

இத்தகவலை ''நியூஸ் வீக்'' இதழ் செய்தியாக வெளியிட்டுள்ளது.

அல்கெய்டா இயக்கம் அமெரிக்காவில் தனது சதி வேலைகளை எப்படி மேற்கொள்ளத் திட்டமிட்டிருந்தது என்ற விபரத்தையும் காலித் தெரிவித்துள்ளார்.

அத்துடன், பாகிஸ்தானைச் சேர்ந்த மஜீத் கான் என்பவர் தான் இத்தகைய பயங்கரவாதச் செயல்களை நிறைவேற்றத் திட்டமிட்டிருந்தார் என்றும் காலித் தெரிவித்துள்ளார். மஜீத் கான் அண்மையில் பாகிஸ்தானில் பிடிபட்டார்.

அமெரிக்காவில் எந்தெந்த இடங்களைக் குறி வைத்துத் தாக்க வேண்டும் என்பதைக் கண்டறிவதற்காக மஜீத் கான் அமெரிக்காவுக்கு அனுப்பப்பட்டார் என்ற விவரத்தையும் காலித் தெரிவித்தார்.

அமெரிக்காவில் பாலங்களைத் தகர்ப்பதற்கு முன் அவற்றின் இணைப்புக்களைத் தளர்த்துவதற்குத் தேவையான கருவிகளை அங்குள்ள காலித் உறவினரிடம் பெறவும் சதித்திட்டம் தீட்டப்பட்டது.

அமெரிக்காவில் கானின் உறவினர்களுக்கு எரிவாயு உற்பத்தி ஆலை சொந்தமாக உள்ளது என்ற தகவலையும் சி.ஐ.ஏ. உளவு அதிகாரிகளிடம் காலித் தெரிவித்துள்ளார்.

காலித் தெரிவித்த தகவல்கள் உண்மையானவையா என்றும் சி.ஐ.ஏ உளவாளிகள் ஆராய்ந்தனர். அவை உறுதி செய்யப்பட்டன.

காலித் தெரிவித்த சதி வேலைகளை உலக வர்த்தக மையக் கட்டடம் தகர்ப்பின் போதே நிறைவேற்றத் திட்டமிடப்பட்டிருந்தது. ஆனால் சர்வதேச பயங்கர வாதி ஒசாமா பின்லேடன் அந்த யோசனைகளை நிராகரித்து விட்டார் என்கிறது அத்தகவல். (பி)

WORLD NEWS
உலக தரிசனம்

## அமெரிக்காவுக்கு எதிர்ப்புத் தெரிவித்து பலநாடுகளில் ஆர்ப்பாட்டங்கள்

(ஜகார்த்தா)

ஈராக் மீதான போருக்கு எதிராக இந்தோனேஷியாவில் நேற்று முன் தினம் நடத்தப்பட்ட ஆர்ப்பாட்ட ஊர்வலத்தில் ஒரு இலட்சம் மக்கள் கலந்து கொண்டுள்ளனர்.

ஒரு இஸ்லாமிய நாட்டில் போருக்கு எதிராக இதுவரை நடத்தப்பட்ட ஆர்ப்பாட்ட ஊர்வலங்களில் மிகப் பெரிய ஆர்ப்பாட்ட ஊர்வலமாக இது கருதப்படுகிறது.

இந்த ஊர்வலத்தில் கிறிஸ்தவ, பௌத்த, மதத்தவர்களும் கலந்து கொண்டுள்ளனர்.

இதேசமயம், ஈராக் மீதான போருக்கு எதிராக சீனாவிலும் ஆர்ப்பாட்ட ஊர்வலம் ஒன்று நடத்தப்பட்டுள்ளது.

இந்த ஊர்வலத்தில் அதிகளவிலான வெளிநாட்டவர்கள் பங்கு பற்றியிருந்தனர்.

அமெரிக்காவின் பொஸ்ரன் நகரிலும் இதேபோன்று ஆர்ப்பாட்டம் நடத்தப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

வியட்னாம் போருக்கு பின்னர் அமெரிக்காவின் பொஸ்டன் நகரில் நடத்தப்பட்ட மிகப் பெரிய ஊர்வலமாக இது அமைந்திருப்பதாக தெரிவிக்கப்படுகிறது. (பி-2)



## 7 பொது மக்கள் கொலை பற்றி யு.எஸ் அதிகாரிகள் விசாரணை

(வாஷிங்டன்)

சோதனைச் சாவடியொன்றில் நிற்காமல் சென்ற கார் ஒன்றிலிருந்த பொது மக்கள் ஏழுபேரை அமெரிக்க படையினர் சுட்டுக் கொன்றார்கள் என்பது பற்றி அமெரிக்க அதிகாரிகள் விசாரணைகளை மேற்கொண்டுள்ளனர்.

இந்தச் சூட்டுச் சம்பவத்தை மிகவும் சரியான செயல் என்ற அமெரிக்க உயர்படை அதிகாரி ஒருவர் நியாயப்படுத்தியிருந்த போதிலும் இந்த நிகழவானது அமெரிக்கர்கள் ஆக்கிரமிப்புக்காகவல்ல மக்களை விடுவிப்பதற்காகவே வந்துள்ளார்கள் என்ற கருத்தை பொய்யாக்குவதாகஇருப்பதாகக் கருதப்படுகின்றது.

கூட்டுப்படையினரை ஈராக்கியர்கள் வில்லன்களாகக் கருதுகிறார்கள் என்ற பிரிட்டிஷ் படையினர் ஏற்கனவே கூறியுள்ளார்கள்.

கடந்த வாரம் தற்கொலைக் குண்டுதாரியினால் 4 அமெரிக்கப் படையினர் கொல்லப்பட்ட இடத்துக்கு அருகில் இந்தச் சம்பவம் நிகழ்ந்துள்ளது.

திங்கட்கிழமையன்று சோதனைச் சாவடியொன்றைக் கடந்து செல்கையில், நிற்கும் படி விடுக்கப்பட்ட எச்சரிக்கையை மீறியதையடுத்து காரின் மீது படையினர் தாக்குதல் நடத்தினர். பெண்களும் சிறுவர்களுமாக 7 பேர் கொல்லப்பட்டனர். 4 பேர் காயமுற்றனர்.

எமது தரைப்படைகள் தம்மைப் பாதுகாத்துக் கொள்ள பூரண உரிமை பெற்றிருக்கிறார்கள் என்று கூட்டுப் படைகளின் உதவித் தலைவராக விளங்கும் ஜெனரல் பீட்டர் பேஸ் கூறினார். (பி)

## எழுத்தாளர் சமுத்திரம் காலமானார்

(சென்னை)

பிரபல தமிழ் எழுத்தாளர் சமுத்திரம் நேற்று சென்னையில் வீதிவிபத்தொன்றில் காலமானார்.

பல நாவல்களையும் சிறுகதைகளையும் எழுதியுள்ள இவர், சாகித்திய அக்கடமி பரிசும் பெற்றுள்ளார். அகில இந்திய வானொலியில் செய்தி ஆசிரியராகவும், செய்தி வாசிப்பவராகவும் கூட இவர் பணியாற்றியிருந்தார். அவருக்கு வயது 62.(பி)

## ஈராக் அதிரடிப் படையின் பலத்தை குறைத்து மதிப்பிட்டுள்ளது யு.என்

(சிட்னி)

ஈராக் அதிபர் சதாம் ஹுசைனின் சிறப்பு அதிரடிப்படையின் ஆற்றலைக் குறைத்து மதிப்பிட்டுள்ளது அமெரிக்க இராணுவத் தலைமையகம். அதனால் தான் ஈராக் மீதான அதன் இராணுவத் தாக்குதலில் எதிர்பார்த்தபடி முன்னேற்றம் இல்லை என்று ஆஸ்திரேலிய இராணுவத்துறை அமைச்சர் ராபர்ட் ஹில் கருத்துக் கூறியுள்ளார்.

''செவன் நெட்வொர்க்'' தொலைக்காட்சிக்கு ஞாயிற்றுக்கிழமை அளித்த பேட்டியில் அவர் கூறியதாவது,

சதாம் ஹுசைனின் சிறப்பு அதிரடிப் படையின் முக்கியப் பணியே உள்ளூர்ப் பகுதிகளில் பாதுகாப்பில் ஈடுபடுவதாகும் ஆனால் இவற்றை கூட்டணிப் படைகளுக்கு எதிராக ஈடுபடுத்தியுள்ளது ஈராக். இவற்றின் தாக்குதல் கடுமையாக உள்ளது அதனால் தான் அமெரிக்கப் படைகளால் விரைவாக முன்னேற முடியவில்லை.

இந்த போர் நீண்ட காலம் தொடரும் என்று கூறுவதற்கில்லை. ஆனால் கடினமானதாக இருக்கும் எனலாம்.

2000 வீரர்களை வளைகுடா அனுப்பியுள்ளது. ஆஸ்திரேலியா தம்மிடம் தற்போதுள்ள உணவு,ஆயுதம்,எரிபொருள் இரும்பைக் கொண்டே பல மாதங்களுக்கு தமது நடவடிக்கைகளை இவர்கள் தொடர முடியும்.

இன்னும் கூடுதலாக வீரர்களை ஆஸ்திரேலியா அனுப்பாது என்றார் ஹில். (பி)








# தரம்-5 புலமைப்பரிசில்
## பயிற்சி வினாத்தாள்

**வினா இல : 10** ஆக்கம் : சுந்தர் வெளியீடு

※ திங்கள், செவ்வாய் ஆகிய நாட்களில் ஒரு பழ வியாபாரியின் விற்பனை பற்றிய விபரத்தை கீழே உள்ள படம் காட்டுகின்றது.




01. திங்கட்கிழமை விற்பனையாகிய பழங்கள் எத்தனை?

02.திங்கள் வியாபாரியினால் விற்பனைக்காக எடுத்து வரப்பட்ட பழங்கள் எத்தனை?

03. பழ வியாபாரி ஒரு பழம் ரூபா 5/= படி விற்பனை செய்தால் இந்த இரு நாட்களிலும் எத்தனை ரூபாய்களை அவன் விற்பனை மூலம் பெற்றிருப்பான்?

04. செவ்வாய்கிழமை விற்பனையில் பழங்கள் எதுவும் எஞ்சவில்லையெனின் அவன் எவ்வளவு ரூபாய்களைப் பெற்றிருப்பான்?

05. அவன் பழம் ஒன்றை ரூபா 4/=இற்கு வாங்கியிருந்தான். பழம் ஒன்றிற்கு ரூபா 2/= இலாபம் பெறத் தக்கவாறு அவன் விலையைக் குறித்தான். ஒரு பழத்தை விற்கவேண்டிய விலை என்ன?

06. அவன் இரு நாட்களும் விற்பனை மூலம் எவ்வளவு இலாபத்தைப் பெற்றிருப்பான்?

※ கீழேயுள்ள அட்டவணையிலுள்ள இடைவெளிகளை நிரப்புக.

| | கணிதவுரு | நேரான விளிம்புகளின் எண்ணிக்கை | உச்சிகளின் எண்ணிக்கை | முகங்களின் எண்ணிக்கை |
|---|---|---|---|---|
| | (உ+ம்) கனவுரு | 12 | 08 | 06 |
| 07. | உருளை | | | |
| 08. | நான்முகி | | | |
| 09. | கோளம் | | | |
| 10. | அரியம் | | | |


※ கீழே சில உருக்கள் உண்டு. அவை தொடர்பான சில விளக்கங்கள் அருகே உண்டு. சரியான விளக்கம்/ விளக்கங்களின் இலக்கம்/ இலக்கத்தை அருகே உள்ள கூட்டினுள் எழுதுக.

11. 
அருகே உள்ள உயிரினம் ஓர்
1) அனைத்தும் உண்ணி
2) தாவர உண்ணி
3) மாமிச உண்ணி ஆகும்

12. 
அருகே உள்ள உயிரினம் ஓர்
1) வேட்டையாடும் பறவை
2) குட்டி போடும் பறவை
3) முட்டையிடும் விலங்கு

13. 
இந்த உயிரினம் பரம்பலடைய உதவுவன
1) விலங்குகள், பறவைகள்
2) காற்று, நீர்
3) மேற்சொன்ன காரணிகள் யாவும்

14. 
அருகே உள்ள உரு வானத்தில் காணப்படுதல் வானவெளியில்
1) நீர் இருப்பதற்கு ஆதாரம்
2) வளியிருப்பதற்கு ஆதாரம்
3) வானத்தில் எதுவும் இல்லை என்பதற்கு ஆதாரமாகும்

15. 

1)இந்த கடதாசி அட்டை விழுந்து விடும்
2) நீருடன் ஒட்டி உள்ளதால் விழமாட்டாது
3) வளிக்கு உதைப்பு உண்டு எனவே விழ மாட்டாது

※ மூன்று தட்டுக்களில் எண்களையும் இலக்கங்களையும் இட்டு வரன் என்னும் சிறுவன் விளையாடிக்கொண்டிருந்தான்.

| தட்டு-I | தட்டு-II | தட்டு-III |
|---|---|---|
| A 10 / 20 C / 30 B | 40 D / T 50 / B 20 | B 50 / 100 C / D 20 |

16. அவன் மூன்று தட்டுக்களுக்கும் பொதுவான ஒரு எண்ணையும் எழுத்தையும் எடுக்க விரும்பினான் எனின் அவன் எடுத்த எண்ணையும் எழுத்தையும் எழுதுக
எண்: .................... எழுத்து: ----------------------

17. தட்டு-II, தட்டு III ஆகியவற்றுக்கு மாத்திரம் பொதுவாக வரும் எண் எழுத்து இருப்பின் அவற்றை எழுதுக.
எண்: -------------------- எழுத்து: ----------------------

18. இம்மூன்று தட்டிலுமுள்ள எண்களை கூட்டி வரும் விடையுடன் ஓர் எண்ணைக் கூட்டி ஐந்தால் பிரிக்க 80 விடையாகப் பெறப்பட்டது. கூட்டப்பட்ட அவ் எண் யாது?

19. இம்மூன்று தட்டிலுமுள்ள எழுத்துக்களில் ஒவ்வொன்றை எடுத்து சரியாக எழுதுவதன் மூலம் விலங்கொன்றின் பெயர் பெறப்படும். அவ்விலங்கின் தமிழ்ப் பெயரை எழுதுக.

20. இங்கு தரப்பட்ட எண்களில் 10ஆம் இடத்து இலக்கங்களை மட்டும் பயன்படுத்தி எழுதத்தக்க மிகப்பெரிய எண்ணையும் மிகச் சிறிய எண்ணையும் எழுதுக.
மிகப் பெரிய எண்: .......................... மிகச் சிறிய எண்: ...............................

※ பிரணவன் தரம் ஐந்தில் கல்வி கற்கும் ஒரு மாணவன் ஆவான். ஒருநாள் தன் தந்தையார் உருவாக்கிய வீட்டுத் தோட்டத்தைப் பார்க்கத் தந்தையுடன் சென்றான்.

**வீட்டுத் தோட்டத்திலே மரவள்ளி ஒரு புறமும் மறுபுறம் வெங்காயம், அவரை என்பனவும் வேலியோரம் பாகல், புடோல் என்பனவும் இன்னொரு புறம் பூசணி, வெள்ளரி என்பனவும் காணப்பட்டன. கிளி, காகம் போன்ற பறவைகளும் அங்கே வந்துபோவதையும் வேறுபல பூச்சிகள் பறப்பதையும் அவதானித்தான். தோட்டத்தில் பணிபுரியும் ஒருவர் இயற்கைப் பசளை போடுவதையும் இன்னொருவர் செயற்கைப் பசளை இடுவதனை அவதானித்தான்.**

21.வீட்டுத் தோட்டம் என்பதால் யாது விளங்குகின்றீர்?

22. அவன் அவதானித்த பறவைகளில் பின்வருவனவற்றிற்கு உதாரணம் தருக.
1) தாவர உண்ணி: ------------------------------ 2) அனைத்தும் உண்ணி: .................

23. தேனை உணவாகக் கொள்ளும், அவன் அவதானித்திருக்கக் கூடிய இரண்டு பூச்சி இனங்களின் பெயர்களைத் தருக.

24. அவன் அவதானித்த கிளி, காகம் என்பன ஏன் அங்கு வந்திருக்கலாம் என எழுதுக.

25. மேலே நீர் குறிப்பிட்ட பறவைகள் தோட்டத்திற்கு நன்மையா தீமையா செய்கின்றன என்பதை குறிப்பிட்டு உதாரணம் தருக.

| பறவை | நன்மை/தீமை | உதாரணம் |
|---|---|---|
| கிளி | | |
| காகம் | | |

※ கீழ்வரும் வினாக்களில் பொருத்தமானவற்றைக் குறிக்கும் இலக்கத்தைக் கூட்டுக்குள் எழுதுக

| 1. மரவள்ளி<br>2. வெங்காயம்<br>3. பாகல்<br>4. அவரை | 1. இலை, குழை<br>2. விலங்குக் கழிவு<br>3. யூரியா உரம்<br>4. பூசணி, வெள்ளரி இலை | 1.சாணி,சிறுநீர்<br>2.இலை, குழை<br>3.யூரியா, உரம்<br>4.அமோனியா, உரம் | 1.பூசணி<br>2.மரவள்ளி<br>3. புடோல்<br>4.வெங்காயம் |
|---|---|---|---|
| புரதம் | செயற்கைப் பசளை | இயற்கைப் பசளை | வித்து மூலம்பெருகுவது |

※ சரியான விடையின் கீழ்க் கோடிடுக.

30. நீளமான காயுடைய தாவரம்
1. பயறு 2. புடோல் 3. அவரை 4. மரவள்ளிக்கிழங்கு

31. கொத்துக் கொத்தாய்ப் பூப்பது
1. பூசணி 2. வெள்ளரி 3. மிளகாய் 4. வெங்காயம்


32. இலையில் உணவு சேமிப்புடைய தாவரம்
1. வெங்காயம் 2. மரவள்ளி 3. புடோல் 4. பாகல்

33. இலங்கைக்குப் பொருளாதாரத்தைத் தேடித் தரும் பயிர்
1. வெங்காயம் 2. மிளகாய் 3. தென்னை 4. பனை

34. பல இனங்களைக் கொண்டதும் பல வர்ண இலைகளைக் கொண்டதுமான தாவரம் எது?
1.நெல் 2.குரோட்டன் 3. றோசா 4. மா

35. ஆறு கால்களை உடைய அங்கி
1. அட்டை 2. தேனீ 3. மண்புழு 4. நத்தை

※ கீழ்வரும் படத்தை நன்கு அவதானிக்க.




அருகே உள்ளவாறு உலோகத்தால் செய்யப்பட்ட கரண்டிகளுக்குள் படத்தில் காட்டப்பட்டுள்ளவாறு பதார்த்தங்களை இட்டு வெப்பமாக்கப்பட்டது. இதன் போது என்ன மாற்றம் அவதானிக்கப்படலாம் என அட்டவணையில் எழுதுக.

| | பொருள் | மாற்றம் |
|---|---|---|
| 36. | கற்பூரம் | |
| 37. | மண | |
| 38. | மெழுகு | |
| 39. | மரக்குற்றி | |
| 40. | பூச்சி உருண்டை | |
| 41. | உபபு | |
| 42. | குங்கிலியம் | |
| 43. | இரும்புக் கம்பி | |

※ கூட்டுக்குள் தரப்பட்டுள்ள சொற்களைக் கொண்டு இடைவெளியை நிரப்புக

அகத்தி, பிளாஸ்ரிக், கோள, பெற்றோல், இந்தியா, நெத்தலிக், முட்டை

44. புரதச் சத்து நிறைந்த கடல் உணவு ----------------------- கருவாடு ஆகும்
45. -------------------------- ஒரு நிறையுணவு ஆகும்
46. -------------------------- இலை கறி சமைத்தலுக்கு உதவும்
47. ---------------------------- பொருட்கள் இலகுவில் உக்காது நீண்ட காலம் மண்ணுள் புதையுண்டு இருக்கும்
48. புவி---------------------------- வடிவான அமைப்புடையது
49. --------------------------- இலங்கைக்கு அண்மையில் அமைந்துள்ள மிகப் பெரிய நாடு ஆகும்
50. ------------------------------ இலகுவில் ஆவியாகக் கூடிய எரிபொருள் ஆகும்

※ கீழ்வரும் ஒவ்வொரு கூற்றுக்கும் சரியாயின் சரி(√ ) எனவும் பிழையாயின் பிழை( × ) எனவும் அடையாளத்தை எதிரே உள்ள புள்ளிக் கோட்டில் எழுதுக.

51. சுவரொட்டியொன்றை சுற்றாடல் தினம், மரநடுகைதினம், உலக சிறுவர் தினம் போன்ற விசேட சந்தர்ப்பங்களுக்காகப் பயன்படுத்திக் கொள்ள முடியும். ( )

52.வெட்டுக் குத்துத்தையலைப் பயன்படுத்தி தலையணையுறை, கைக்குட்டை, மெத்தை உறைகள் என்பனவற்றை அலங்கரிக்கலாம் ( )

53. நமது நாட்டின் தேசிய கீதம் நாட்டின் பெருமையையும் கௌரவத்தையும் பிரதிபலிப்பதில்லை ( )

54. கடதாசி ஒன்றில் நீர் வர்ணத் துளிகளை இட்டு அதன் மேல் வேகமாக ஊதுவதன் மூலம் பற்றிக் அலங்காரம் செய்யலாம் ( )

55. சுளகு நடனம் கிராமிய நடனங்களில் ஒன்றாகும். ( )

56. உடுக்கு, துந்தன், ஒத்து, தாளம் என்பன நாட்டார் பாடல் வகைக்கேற்ற இசைக் கருவிகளாகும். ( )

※ கீழே உள்ள கூடுகளுக்குள் தரப்பட்டுள்ள ஆங்கில எழுத்துக்களில் ஒன்றை நீக்கின் ஏனைய எழுத்துக்களைக் கொண்டு கருத்து நிறைந்த சொல்லை ஆக்கலாம். நீக்க வேண்டிய எழுத்தினை சுற்றி வட்டமிடுக.

| 57. | 58. | 59. | 60. |
|---|---|---|---|
| M e o n d k y | B l u t t e r n y f | F d l o s r e w | e r s T e e r |

❖ கீழே உள்ள படங்களுடன் பொருந்தத்தக்க சொற்களுக்குரிய சரியான இலக்கத்தை படத்தின் அருகே எழுதுக.

① FLY ② RUN ③ SWIM ④JUMP ⑤ SWING ⑥GLIDE

60.  61.  62.  63.  64.  65. 

(2ம் பக்கம் பார்க்க)

# தரம்-5 புலமைப்பரிசில்

## பயிற்சி வினாத்தாள்

## இலக்கம் : 08

### அதிகூடியபுள்ளிஒழுங்கில்மாணவர்களின் பெயர்விபரம்வருமாறு:

01. சா.மதுறமி- சுண்டுக்குழி மகளிர் கல்லூரி
02. ந.நிவாஷன்- இந்து ஆரம்பப் பாடசாலை
03. க.கயூபன்- மானிப்பாய் விவேகானந்தா வித்தியாசாலை
04. ர.சதீஸ்- இணுவில் மத்திய கல்லூரி
05. கே.சோபனா- அருணோதயாக் கல்லூரி
06. ஞா.பிரகலாதன்- ய/ இந்து ஆரம்பப் பாடசாலை
07. ஸ்ரீ.கஸ்தூரி- அச்சுவேலி மத்திய கல்லூரி
08. இ.வினுஷா- மல்லாகம் கனிஷ்ட வித்தியாலயம்
09. சீ.சுஜீபனா- அச்சுவேலி மத்திய கல்லூரி
10. சி.ஜோதிகா- சுண்டுக்குழி மகளிர் கல்லூரி
11. பா.பிரியதர்சினி- பொலிகண்டி இ.த.க. பாடசாலை
12. சி.கனிஷ்ரா- உசன் இராமநாதன் மகாவித்தியாலயம்
13. ம.இந்துஜா- மல்லாகம் கனிஷ்ட வித்தியாலயம்
14. ச.ஜெயகணேஷ்- கொக்குவில் இந்து ஆரம்பப் பாடசாலை
15. பா.ஜனந்தினி- கைதடி சேதுகாவலர் வித்தியாலயம்
16. தி.கோபிகா- உடுவில் மகளிர் கல்லூரி
17. ந.கஜீவன்- மானிப்பாய் சோதி வேம்படி வித்தியாலயம்
18. தி.வாகீசன்- பெரியபுலம் மகாவித்தியாலயம்
19. சி.தேவகி- துன்னாலை மெ.மி.த.க பாடசாலை
20. க.தனுசியா- வல்வெட்டித்துறை விநாயகர் வித்தியாலயம்
21. கு.சர்மிளா- உசன் இராமநாதன் மகாவித்தியாலயம்
22. ஜெ.செந்தூரன்- கொக்குவில் இந்து ஆரம்பப் பாடசாலை
23. சி.ஜெயக்குமார்- வல்வை அ.மி.த.க. பாடசாலை
24. கோ.டேவிட்- டிறிபேக் கல்லூரி
25. சி.கானமிர்தா- சாவகச்சேரி மகளிர் மகாவித்தியாலயம்
26. கே.விந்துஜன்- சாவகச்சேரி இந்து ஆரம்பப் பாடசாலை
27. சி.சுபாங்கன்- இந்து ஆரம்பப் பாடசாலை
28. கா.சயானி- சுழிபுரம் ஐக்கிய சங்க சைவ வித்தியாசாலை
29. ந.கோகுலன்- சுழிபுரம் ஐக்கிய சங்க சைவ வித்தியாசலை
30. யே.லவஜெனா- அச்சுவேலி மத்திய கல்லூரி
31. அபிவர்சனி- சுன்னாகம் திருஞான சம்பந்தர் வித்தியாசாலை
32. ப.சுகீர்த்தனா- தேவரயாளி இந்துக் கல்லூரி
33. இ.சுதர்சினி- சுழிபுரம் ஐக்கிய சங்க சைவ வித்தியாசாலை
34. வ.கஸ்தூரி- சுதுமலை வடக்கு த.க. வித்தியாலயம்
35. க.விசாகன்- பரியோவான் கல்லூரி
36. தி.கௌரி- திருநெல்வேலி றோ.க. பாடசாலை
37. ம.சரண்யன்- ஆவரங்கால் நடராஜ இராமலிங்கவித்தியாலயம்
38. சி.விஷ்ணுகரன்- சுன்னாகம் இராமநாதன் கல்லூரி
39. ச. ஷண்மதுரன்- சுழிபுரம் ஐக்கிய சங்க சைவ வித்தியாசாலை
40. சி.டினோஜன்- ஆவரங்கால் நடராஜ ராமலிங்க வித்தியாலயம்
41. த.ரூசிகா- இணுவில் மத்திய கல்லூரி
42. த.நீருஜா- வல்வை றோ.க.த.க பாடசாலை
43. மு.பிருந்தா- நெல்லியடி மெ.மி.த.க. பாடசாலை
44. ர.யதுர்சன்- இந்து ஆரம்பப் பாடசாலை
45. வி.சாருஜா- ஜோன் பொஸ்கோ வித்தியாலயம்
46. அ.கோபிகா- மானிப்பாய் விவேகானந்தா வித்தியாலயம்
47. வா.சரண்ஜா- தம்பசிட்டி மெ.மி.த.க பாடசாலை
48. தி.லக்ஷனா- கரவெட்டி ஞானாசாரியார் கல்லூரி
49. வெ.தாரணி- கைதடி சேதுகாவலர் வித்தியாலயம்
50. கோ.ஸ்ரீநாத்- யா/இந்து ஆரம்பப் பாடசாலை
51. கு.வைஷ்ணவி- ஆனைக்கோட்டை அ.மி.த.க. பாடசாலை
52. பெ.கோகுலன்- மானிப்பாய் விவேகானந்தா வித்தியாசாலை
53. ப.யூலிஸ்கா- மயிலிட்டி றோ.க. வித்தியாலயம்
54. ந.வினோரூபன்- உசன் இராமநாதன் மகாவித்தியாலயம்
55. இ.பவீசன்- உடுவில் மகளிர் கல்லூரி
56. பு.லதுசா- யா/இந்து ஆரம்பப் பாடசாலை
57. பிரணவன்- உடுப்பிட்டி அ.மி. கல்லூரி
58. த.விஜிதன்- கரந்தன் இராமுப்பிள்ளை வித்தியாலயம்
59. ஜெ.பிரியந்தன்- புற்றளை மகாவித்தியாலயம்
60. இ.சிந்துஜன்- தாவடி இ.த.க. பாடசாலை
61. இ.ஸ்ரீறஜீபன்- தாவடி இ.த.க. பாடசாலை
62. சி.மனோஜிதன்- கொக்குவில் இந்து ஆரம்பப் பாடசாலை
63. செ.திருக்குமரன்- கோப்பாய் நாவலர் தமிழ் வித்தியாலயம்
64. வி.விதுர்ஷனா- உசன் இராமநாதன் வித்தியாலயம்
65. சி.றெபிநாத்- நவாலி அட்டகிரி சைவவித்தியாசாலை
66. ஆ.தர்சனா- ஆவரங்கால் நடராஜ இராமலிங்க வித்தியாலயம்
67. ச.வேனிலன்- இணுவில் மத்திய கல்லூரி
68. கோ.சரண்யா- ஆனைப்பந்தி மெ.மி. வித்தியாலயம்
69. க.லோகராஜ்- கைதடி நுணாவில் அ.த.க. பாடசாலை
70. இ.வித்தியாகரன்- கரந்தன் இராமுப்பிள்ளை வித்தியாலயம்
71. ச.பிரசாந்- துன்னாலை காசிநாதர் வித்தியாலயம்
72. சி.துளசிகா- சங்கானை சிவப்பிரகாச மகாவித்தியாலயம்
73. ச.சுபஸ்திகா- கந்தரோடை தமிழ்கந்தையா வித்தியாசாலை
74. சு.ரஜிக்குமார்- கொக்குவில் இந்து ஆரம்பப் பாடசாலை
75. சு.ஹிருசுபா- வட இந்து மகளிர் கல்லூரி
76. சி.நிரோஜா- கோப்பாய் நாவலர் தமிழ் வித்தியாலயம்
77. ஜெ.சுமணஜா- ஆவரங்கால் நடராஜ இராமலிங்கவித்தியாலயம்
78. உ.நவநீதன்- நீர்வேலி இந்து தமிழ் கலவன் பாடசாலை
79. மு.கிஷாந்தன்- ஜோன் பொஸ்கோ வித்தியாலயம்
80. ச.ராகவன்- காரைநகர் யாழ்ற்றன் கல்லூரி
81. வே.பிரசன்யா- உசன் இராமநாதன் மகாவித்தியாலயம்
82. ம.சிவரோசன்- வட்டு யாழ்ப்பாணக் கல்லூரி
83. லோ.பபிதா- பண்டத்தரிப்பு மகளிர் உயர்தரப் பாடசாலை
84. ச.அபிநயா- சுண்டுக்குழி மகளிர் கல்லூரி
85. த.அகர்சனன்- யா/ இந்து ஆரம்பப் பாடசாலை
86. பா.ஆரண்யா- யா/ இந்து மகளிர் ஆரம்பப் பாடசாலை
87. சி.சரண்யா- சாவகச்சேரி ஆரம்பப் பாடசாலை
88. ச.மேனுசா- ஆவரங்கால் நடராஜ இராமலிங்க வித்தியாலயம்
89. ச.சோபிகா- கந்தரோடை தமிழ்க் கந்தையா வித்தியாசாலை
90. கீ.அச்சுதன்- சாவகச்சேரி/ டிறிபேக் கல்லூரி
91. பே.யதிஸ்கரன்- மானிப்பாய் விவேகானந்தா வித்தியாலயம்
92. இ.பகிரதன்- உடுப்பிட்டி மகளிர் கல்லூரி
93. சி.சிவசாந்- தம்பசிட்டி மெ.மி. பாடசாலை
94. சி.தஜனி- ஆவரங்கால் நடராஜ இராமலிங்க மகாவித்தியாலயம்
95. ஈ.சௌமிதா- யா/ புனித திரேசாள் மகளிர் கல்லூரி
96. சி.சிவசுகந்தன்- மயிலிட்டி றோ.க.த.க பாடசாலை
97. இ.அனுசிதா- யா/ இந்து ஆரம்பப் பாடசாலை
98. ச.சஜிதீப்- சங்கானை/ சிவப்பிரகாச மகா வித்தியாலயம்
99. சி.மதுஷன்- வட்டு/ யாழ்ப்பாணக் கல்லூரி
100. த.சர்மிளா- பொலிகண்டி இ.த.க. பாடசாலை
101. பா.டினேஸ்- துன்னாலை மே.மெ.மி.த.க. பாடசாலை
102. த.கபிலன்- யா/ பரியோவான் கல்லூரி
103. சி.ஜெயநந்தினி- சுழிபுரம் ஐக்கியசங்க சைவவித்தியாசாலை
104. கா.கஜானி- தெல்லிப்பழை மகாஜனாக்கல்லூரி
105. சி.கிரசன்னா- கோப்பாய் நாவலர் தமிழ் வித்தியாலயம்
106. ஆ.றெமோனா- மயிலிட்டி றோ.க வித்தியாலயம்
107. தி.ரஜிக்கா- சுழிபுரம் ஐக்கியசங்க சைவவித்தியாலயம்
108. தி.கஜிக்கா- சுழிபுரம் ஐக்கியசங்க சைவவித்தியாலயம்
109. வி.துஷ்யந்தன்- ஸ்ரீ நயினாதீவு நாகபூஷணி வித்தியாலயம்
110. சி.கோகிலவேணி- மானிப்பாய் விவேகானந்தா வித்தியாசாலை
111. வி.கிதுயன்- மானிப்பாய் விவேகானந்தா வித்தியாசாலை
112. செ.நிசாந்தன்- உடுப்பிட்டி அ.மி. கல்லூரி
113. கு.சுபாதன்- கரவெட்டி தாமோதர வித்தியாசாலை
114. ஈ.கோபிதன்- கோப்பாய் நாவலர் தமிழ் வித்தியாலயம்
115. கி.தேனுகா- சாவகச்சேரி மகளிர் கல்லூரி
116. தி.தசேந்திரன்- உசன் இராமநாதன் வித்தியாலயம்
117. ச.நாராயணி- ஆவரங்கால் நடராஜ இராமலிங்க வித்தியாலயம்
118. ஆ.நிரோஜினி- நவாலி சென்பீற்றேஸ் றோ.க.த.க பாடசாலை
119. க.கணபாலன்- யா/இந்து ஆரம்பப் பாடசாலை
120. தி.சயேந்தி- ஆவரங்கால் நடராஜ இராமலிங்க வித்தியாலயம்
121. தெ.சுபாஸ்- புற்றளை மகாவித்தியாலயம்
122. இ.கிரிசாந்- யா/மத்திய கல்லூரி
123. ரா.துர்க்கா- கரந்தன் இராமுப்பிள்ளை வித்தியாலயம்
124. சி.பிரியந்தினி- கோப்பாய் நாவலர் வித்தியாலயம்
125. ஆ.சேந்தன்- உடுப்பிட்டி அ.மி. கல்லூரி
126. ச.துளஷிராம்- தாவடி இ.த.க. பாடசாலை
127. க.சகாதேவன்- சுன்னாகம் திருஞானசம்பந்தர் வித்தியாசாலை
128. நா.நளாயினி- சுன்னாகம் திருஞானசம்பந்தர் வித்தியாலயம்
129. க.நிறோசன்- சுன்னாகம் திருஞானசம்பந்தர் வித்தியாசாலை
130. ர.ராஜமோகன்- சுன்னாகம் திருஞானசம்பந்தர் வித்தியாசாலை

### பயிற்சி 8 இன் விடைகள்

01. சிங்கத்தின் வீடு
02. சிவிங்கி/ ஓட்டகச் சிவிங்கி
03. சிறுத்தை
04. குதிரை
05. சிலந்தி, குரங்கு, ஒட்டகம், சிவிங்கி
06. கழுதை, குதிரை, குயில்கள், மயில்கள்
07. யானை, பூனை, மான்கள், முயல்கள்
08. குயில் 09. சிங்கம் 10. குரங்கு
11. யானை 12. குரங்கு 13. குதிரை
14. மேளம் 15. தாளம் 16. பூமாலை
17. மாலைவேளை/பின்னேரம்
18. யானை, ஒட்டகம், பூனை, குயில்
19. சிறுத்தைகள், மான்கள், முயல்கள்
20. விலங்குகளின் கொண்டாட்டம்
21. வட்டம் 22. சதுரம்
23. முக்கோணம் 24. செவ்வகம்
25. வண்டிச்சில்லு வேறு பொருத்த மானது
26. 20 27. 10 28. 70
29. ரூபா 140 30. நீலம் 31. பி
32. ச 33.பி 34.ச 35.ச
36. 2030 37. பொருத்தமான விடை
38. 5/9 39. 7 மணி
40.
41. (4) 42. (3) 43. (1)
44. (2) 45. (4) 46. (1)
47. (6) 48. (7) 49. (2)
50. (3) 51. (3) 52. (3)
53. (2) 54. (1) 55. (2)
56. (3) 57. (2) 58. (1)
59. (2) 60. (1)
61. சிவப்பு 62. பாடசாலை
63. பேருந்து
64. தபால் அலுவலகம்
65. ஏழு
66. தரம்/வகுப்பு
67. Fruits
68. Table
69. Eight
70. Ear
71. Flower
72. Lion
73. ஓ
74. ஓ
75.

76-81 வரையிலான வினாக்களுக்கு பொருத்தமான எமுவாய் பயனிலை யுடன் அமைந்த 6 வாக்கியங்கள் எழுதப்படல் வேண்டும். ஒவ்வொரு வாக்கியமும் ஆகக் குறைந்தது 4 சொற்களையாவது கொண்டிருக்க வேண்டும்.

*விவசாய நிலங்கள் ஒப்படைப்பு விவகாரம்*

## புலிகளின் தலைமைத்துவத்திற்கு அமைச்சர் ஹக்கீம் நன்றி தெரிவிப்பு

(கொழும்பு)

முஸ்லிம்விவசாயிகளின்காணிகளை தமிழீழ விடுதலைப் புலிகள்கையளித் ததோடு தங்களின்கடமைகள் முடிந்து விட்டது என எண்ணக் கூடாது.

முஸ்லிம் விவசாயிகள் அக் காணிக ளுக்கு சென்று எவ்வித தங்கு தடையு மின்றி விவசாயச் செய்கையில் ஈடுபடும் நடவடிக்கைகளை ஏற்படுத்திக் கொடுக்க வேண்டும்.

முஸ்லிம் விவகார அமைச்சரும், ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் கட்சியின் தலைவருமான ரவூப் ஹக்கீம்நேற்று முன்தினம் காத்தான குடி மகளிர் அரபுக் கல்லூரியில் நடைபெற்ற விழாவில் பிரதம விருந்தினராகக் கலந்து கொண்டு உரையாற்றுகையில் இவ்வாறு கேட்டுக் கொண்டார்.

அங்கு தொடர்ந்தும் உரையாற் றிய அமைச்சர்,

மட்டக்களப்பு மாவட்டத்தில் இராணுவக்கட்டுப்பாட்டு பிரதேசங்களில் உள்ள முஸ்லிம்களுக்கு சொந்தமான விவசாயக்காணிகளை மீண்டும் முஸ்லிம் விவசாயி களிடம் ஒப்படைப்பதற்கு விடுதலைப் புலிகள் முன்வந்துள்ளனர்.

புரிந்துணர்வு உடன்படிக்கையின் அடிப்படையிலும் பரஸ்பரம் விட்டுக்கொடுப்புடனும் முஸ்லிம் விவசாயிகள் பயிர்ச்செய்கையில் ஈடுபட அனுமதி வழங்கியமைக்காக புலிகளின் மட்டு-அம்பாறை மாவட் டத்தளபதிக்கும் தலைமைத்து வத்துக்கும் கட்சியின் சார்பில் நன்றி தெரிவிக்கிறோம் என்றார்.

மேலும், இவ்வாறான நடவடிக்கை களின் மூலம் தமிழ்-முஸ்லிம் மகளி டையிலான உறவு படிப்படியாக ஸ்திரமடைந்து செல்லும்.

இதற்கு புரிந்துணர்வும், இரு இனங்களுக்கிடையேயான ஒற்றுமையும் அவசியமாகும் என்று தெரிவித்துள்ளார். (உ-8)

## ஷார்ஜா போட்டியில் ரவிந்துஷா இல்லை

(ஷார்ஜா)

ஷார்ஜாப் போட்டிகளில் பங்கு பற்றும் கென்ய அணியில் அசாம்பத் துடுப்பாட்ட வீரர் ரவீந்துஷா விளையாட மாட்டார் எனத் தெரியவருகின்றது. இப்போட்டியில் பங்கேற்கும் கென்ய அணி வீரர் வருமாறு:

ஸ்டீவ் டிக்கொலோ (அணித்தலை வர்) மோரிஸ் ஒடும்பே, ஹிற்றேஸ் மோடி, பிறீஜஸ் பற்றேஸ், மார்டீன் சுஜி, ரோன் சுஜி, தோமஸ் ஓடோயோ, கெனடி ஒபுடா, ஜோசப்அங்காரா, பீற்றர் ஒங்கோண்டோ, டேவிட் ஒபுயா, கொலின்ஸ் ஒபுயா, ஜிம்மி ஹமாண்டி, அல்பிறட் லூசினோ, மோறிஸ் ஒயுமா ஆகிய வீரர்களது பெயர்ப் பட்டியலை கென்ய கிரிக்கெட் கட்டுப்பாட்டுச் சபை வெளியிட் டுள்ளது. (உ-55)

## ஜேர்மனிக்கு அதிர்ச்சித் தோல்வி

(ஈபோ)

நடப்பு ஹொக்கி சம்பியனான ஜேர்மனியை அதிர்ச்சித் தோல்விக்கு உள்ளாக்கி பாகிஸ்தான் 12வது ஆண்டு அஸ்லன்ஷா ஹொக்கிக் கிண்ணத்தை சுவீகரித்துள்ளது.

கடந்த ஞாயிற்றுக்கிழமை நடை பெற்ற இறுதியாட்டத்தில் சபீர் ஹீசைன் ஆட்டத்தின் அறுபத்திரண்டாவது நிமிடத்தில் பாகிஸ்தான் அணிக்கான வெற்றிக் கோலை பெற்றுக் கொடுத்தார்.

மூன்றாவது இடத்துக்கான ஆட்டத்தில் நியூசிலாந்து அணி தென்கொரிய அணியை 3:2 என்ற கோல் கணக்கில் வென்றது. (உ-55)

## கணனி வகுப்பு

(யாழ்ப்பாணம்)

மானிப்பாய் ஐ.என்.எஸ். கணனிப் பயிற்சி நிறுவனத்தில் பாடசாலை மாணவர்கள் மற்றும் அலுவலகப் பணியாளர்கள், கணனி சார் தொழில் புரிபவர்களுக்காக ஒழுங்கமைக்கப் பட்ட விசேட கணனி வகுப்புகள் எதிர் வரும் 5ஆம் திகதி சனிக்கிழமை முதல் இடம்பெறவுள்ளன. (உ-10)

## இடைநிறுத்தப்பட்டிருந்த நியாப் பணிகள் ஆரம்பம்

(யாழ்ப்பாணம்)

இடைநிறுத்தப்பட்டிருந்த நியாப் திட்டப்பணிகள் குடாநாட்டில் மீண்டும் ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

நியாப் திட்டத்தின் கீழ் குடாநாட் டில் மேற்கொள்ளப்பட்டுவந்த குளப் புனரமைப்புப் பணிகள் மழை காரணமாக கடந்த சில மாதங்களாக நிறுத்தப்பட்டிருந் தமை தெரிந்ததே.

இந்த வகையில் துன்னாலைப் பகுதியில் உள்ள குறுக்குக் கடல், கடுவிடாய் கிராமங்களில் உள்ள குளங்கள் புனரமைப்புப் பணி தற்போது இடம்பெற்று வருகின்றது. (உ-4)


**அரசாங்க மரக் கூட்டுத்தாபனம்**

**தீராந்திகள் ஏலவிற்பனை**

**இடம் :** மரக்காலை
அரசாங்க மரக் கூட்டுத்தாபனம்,
சட்டநாதர் வீதி,
நல்லூர்.

**காலம் :** 07.04.2003 - திங்கட்கிழமை
காலை 11.00 மணி

**விபரம் :** தொகுதி இல : I
1) இறக்குமதி செய்யப்பட்ட மரங்கள் (கெம்பஸ)
2) மலைவேம்பு பலகைகள்
3) விசேட தர தீராந்திகள்

தொகுதி இல : II
1) விசேட (மேல்) தர தீராந்திகள்
2) முதல் தர தீராந்திகள்
3) விசேட தர தீராந்திகள்

தொகுதி இல : III
1) விசேட தர தீராந்திகள்

குறித்த பொருட்களை அலுவலக நேரத்தில் பார்வையிடலாம்.
மேலதிக விபரங்களுக்கு எம்முடன் தொடர்பு கொள்ளவும்.

அரசாங்க மரக்கூட்டுத்தாபனம்,
பருத்தித்துறை வீதி,
ஆனைப்பந்தி,
யாழ்ப்பாணம்.
தொலைபேசி: 222 - 2349

பிராந்திய முகாமையாளர்.




உதவி தேவைப்படுபவர்களுக்காக மனிதாபிமான உதவிகள் கிடைப்பதில் சிரமத்தில் சிக்கியுள்ள ஈராக்கியர்கள்.



ஈராக்கிற்கான உயிர்த் தியாகம் புரிவதற்கு மேலும் பல தொண்டர்கள் பக்தாத்துக்குப் போகின்றனர்.



யூப்பிரட்டிஷ் நதியின் மீதான கேந்திர பாலம் ஒன்றை அமெரிக்கப் படைகள் கைப்பற்றி வடக்கு நோக்கி முன்னேறும் காட்சி.



நஸாரியாவில் பிடிபட்ட ஈராக்கிய ஆயுதங்கள்.



முன்னர் இரசாயன தாக்குதலுக்கான மார்ஷ் அரபுக்கள் திங்களன்று பிரிட்டிஷ் வீரர்களை சந்தித்தனர்.



பொதுமக்கள் மனங்களை வென்றெடுக்க பிரிட்டிஷ் படைகள் முயற்சி

## அமெரிக்கப் பாதுகாப்பு அமைச்சரின் திட்டங்கள் கேள்விக் குறியாகியுள்ளது

(வாஷிங்டன்)

ஈராக்கிற்கு எதிராக அமெரிக்க பாதுகாப்பு இராஜாங்க அமைச்சர் ரொனால்ட் ரம்ஸ்பீல்ற் வகுத்த திட்டம் அமெரிக்காவில் பல்வேறு மட்டங்களில் விமர்சனங்களுக்குள்ளாகி வருவதாக தெரிவிக்கப்படுகின்றது.

விரைவாகவும் இலகுவாகவும் ஈராக் யுத்தம் முடிந்து விடுமென அமெரிக்க தலைவர்கள் எதிர்வு கூறுவது போல் எதுவும் அமையாது என்ற நிலை தோன்றியுள்ள இந்நிலையில் விமர்சனங்கள் எழுந்துள்ளன.

ஈராக் ஜனாதிபதி சதாம் ஹீசைனை பதவி கவிழ்ப்பதற்கான உயர் தொழில்நுட்ப இராணுவ நடவடிக்கையை மேற்கொள்ள ரம்ஸ்பீல்ற் எடுத்துள்ள அபாயகரமான முடிவுகள் சுலபமானதா? என்று ஓய்வு பெற்ற உயர் அதிகாரிகள் பலர் கேள்வி எழுப்பியுள்ளார்கள்.

இதேவேளை, ரம்ஸ் பீல்ற்றின் ஆதரவாளர்களும் அமெரிக்காவின் வெளிநாட்டுக் கொள்கைகளில் அவர் ஆற்றிவரும் பெரும்பங்கை கடுமையாக விமர்சித்துள்ளனர். (பி-2)

## யு. எஸ்–பிரி படைகளுக்கு ஏற்பட்டுள்ள போர் இழப்புகள்

(பக்தாத்)

ஈராக் மீதான இராணுவத் தாக்குதலை அமெரிக்கா 14 நாள்களாக நடத்தி வருகிறது. இப்போரில் பல அமெரிக்க வீரர்கள் கொல்லப்பட்டுள்ளனர். பலர் காயமடைந்துள்ளனர். 7 வீரர்கள் போர்க் கைதிகளாக ஈராக் இராணுவத்திடம் பிடிபட்டுள்ளனர். மேலும் 15 வீரர்களைக் காணவில்லை என்று அமெரிக்க இராணுவ வட்டாரங்கள் கூறின.

கடந்த 14 நாள்கள் பிரிட்டிஷ் இராணுவத்தைச் சேர்ந்த பலர் இறந்துள்ளனர். அவர்களில் ஈராக் இராணுவத்துடன் நடந்த சண்டையில் கொல்லப்பட்டவர்கள் 5 பேர். மற்றவர்கள் விமானம் மற்றும் ஹெலிகொப்டர் விபத்துக்களில் பலியானானர்கள் என்று பிரிட்டிஷ் இராணுவ வட்டாரங்கள் தெரிவித்தன.

ஞாயிற்றுக்கிழமை தென்மத்திய பகுதியில் ஈராக் இராணுவத்துடன் சண்டை நடந்து கொண்டு இருந்த போது இராணுவ வாகனம் மோதி அமெரிக்க வீரர் ஒருவர் உயிரிழந்தார். அமெரிக்க இராணுவ வாகனமொன்று ஆற்றுக்கால்வாயில் விழுந்து மூழ்கியதில் மற்றொரு வீரர் மாண்டார் என்றும் யு.எஸ் இராணுவத் தலைமையகம் தெரிவித்தது. (பி)

## பக்தாத் நகருக்குள் கூட்டுப்படை நுழைந்தால் பலி அதிகமாகும்

(குவைத்)

பக்தாத் நகருக்குள் நுழைந்தால் ஈராக் வீரர்களின் தாக்குதல் பயங்கரமாக இருக்கும். இதனால் தம் படைகளுக்கு உயிர்சேதம் அதிகம் ஏற்படும் என்று பிரிட்டன் அஞ்சுகிறது.

அமெரிக்க கூட்டுப்படைகள் பக்தாத் நகரை நெருங்க நெருங்க ஈராக் படைகளின் தாக்குதல்கள் அதிகரித்தது. இதை சற்றும் எதிர் பாராத அமெரிக்க கூட்டுப்படைகள் திடீரென்று தரை வழித்தாக்குதலை 6 நாட்களுக்கு நிறுத்தி விட்டன. கூட்டுப்படைகளுக்கு தோல்வி ஏற்பட்டிருப்பதை இந்த போர் நிறுத்தம் எடுத்துக் காட்டுகிறது.

தரை வழி தாக்குதல் நிறுத்தத்திற்கு காரணம் என்ன என்பது தற்போது வெளியாகி உள்ளது. பக்தாத் நகருக்குள் நுழைந்து தாக்குதல் நடத்தினால் பிரிட்டன் படைகளுக்கு அதிக அளவில் உயர்பலி ஏற்படும் என்று கருதப்பட்டதால் தான் தரை வழித்தாக்குதல்கள் நிறுத்தப்பட்டுள்ளது. அயர்லாந்து நாட்டில் தெருக்களில் சண்டையிட்ட அனுபவம் பிரிட்டன் படைகளுக்கு இருப்பதால் பக்தாத் நகருக்குள் நுழையும் போது கூட்டுப்படைகளுக்கு பிரிட்டன் படைகள் தான் தலைமை தாங்கிச் செல்ல வேண்டும். அப்போது ஈராக் வீரர்கள் எதிர்தாக்குதல் நடத்துவார்கள். இதில் பிரிட்டன் படைகள் ஆயிரத்துக்கும் மேற்பட்டோர் பலியாவார்கள் என்று மதிப்பிடப்பட்டது. இதனால் தான் தரை வழித்தாக்குதலை, அமெரிக்க கூட்டுப்படைகள் நிறுத்தி உள்ளன. முதலில் 612 பேர் தான் உயிரிழக்க நேரிடும் என்று கருதப்பட்டது. கணக்கு தவறாகப் போய் விட்டதால் மறுஉத்தரவு வரும்வரை தாக்குதலை நிறுத்தும் படி கூட்டுப்படைகளுக்கு உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது.

இதற்கிடையில் பிரிட்டன் பிரதமர் ரொனிபிளேயர் தன்னுடைய இராணுவ அமைச்சர் மற்றும் உயர்அதிகாரிகளுடன் ஆலோசனை நடத்தினார். (பி)


## யு.எஸ். வீரர்களின் புதைகுழிகள் கண்டுபிடிப்பு

(வாஷிங்டன்)

தெற்கு ஈராக்கில் முன்னேறிச் செல்லும் அமெரிக்கப் படைகள் நசிரியா நகரில் சமீபத்தில் புதைக்கப்பட்ட சிலரது பிணங்களைக் கண்டுபிடித்தன.

ஈராக் இராணுவத்திடம் சிக்கிய அமெரிக்க வீரர்களைக் கொன்று அவர்களை இங்கு புதைத்து விட்டனரா என்று அமெரிக்க இராணுவத்தைச் சேர்ந்த தடய அறிவியல் நிபுணர்கள் ஆராய்ந்து வருகின்றனர்.

12 அமெரிக்க வீரர்கள் கடந்த வாரத்திலிருந்து காணவில்லை. அவர்களில் சிலரை பிடித்து வைத்திருப்பதாக ஈராக் தொலைக்காட்சியில்காட்டியது. சில வீரர்கள் குண்டடிபட்டு இறந்திருப்பதும் அந்த தொலைக்காட்சியில் காட்டப்பட்டது. அவர்கள் நெற்றியில் சுடப்பட்டிருப்பதும் தெரியவந்தது. எனவே ஈராக்கிடம் சிக்கிய அமெரிக்க வீரர்கள் சுட்டுக் கொல்லப்பட்டிருக்கலாம் என்ற சந்தேகம்எழுந்துள்ளது. உள்ளது. (பி)



எந்த நபரும் தற்கொலைக் குண்டுதாரியாக இருக்கலாம்.



ஏவுகணைத் தாக்குதல்கள் குறித்து கவலையுறும் மக்கள்.



பாக். கட்சியின் தலைமையகத்தில் பிரிட்டிஷ் துருப்புகள் சோதனை நடத்தினர்.



பிரிட்டன் ஹெலி ,தாக்குதலுக்குப் புறப்படுகின்றது.



அமெரிக்காவின் உயர் மட்ட இராணுவ சக்தியுடன் ஈராக்கின் வழமையான போர் முறைகளை ஒப்பிட முடியாது.



சதாமை ஈராக்கியர் சிலர் எதிர்க்கிறார்கள் என்ற அடையாளங்களும் காணப்படுகின்றன.



தனது மனைவியையும் மூன்று பிள்ளைகளையும் இழந்த சோகத்தில் காணப்படுகிறார்.

## இன்று ஒரு தகவல்

# எதிர்காலக் கவலைகள்!

ஒருவர் மிகவும் கவலையோடு உட்கார்ந்திருந்தார். ''எதைப் பற்றி சார் கவலைப் படுகிறீர்கள்?'' என்று கேட்டேன். எதிர்காலத் தைப்பற்றி கவலைப்படுகின்றேன் என்றார். ஏன் ? என்று கேட்டேன் என்ன செய்வதென்றே தெரியவில்லை சார். எதிர்காலம் ஒரே இருளாக இருக்கிறது. பாதையே புரியவில்லை என்றார். இன்று நமது இளைஞர்கள் பலருக்கு எதிர்காலம் இருளாகத்தான் தெரிகிறது. அவர்கள் எல்லோரும் இந்தக் கதையைக் கொஞ்சம் கேட்க வேண்டும்.

ஒரு மலையடி வாரத்தில் ஒரு சிறிய கிராமம். அந்த மலை மிகவும் உயரமானது. அடர்த்தியாக செடி, கொடிகள், மரங்கள் மண்டிக் கிடக்கின்றன. பகல் வேளையிலேயே இருளாகத்தான் இருக்கும். அவ்வளவு அடர்த்தி. அந்த மலை உச்சியிலே ஒரு கோயில். முதல் நாள் இரவில் புறப்பட்டால்தான் காலையில் அந்தக் கோயிலுக்குப்போய்ச் சேர முடியும். கிராமத்துஇளைஞன் ஒருவன் அந்தமலை உச்சிக்கு போக வேண்டியிருந்ததால், கையில் ஒரு விளக்கை எடுத்துக் கொண்டு முதல் நாள் இரவே புறப்பட்டான். புறப்பட்டுப்போனவன கிராமத்து எல்லையிலேயே நின்று விட்டான். ஏன் தெரியுமா?

அவன் கையில் இருந்த விளக்கின் வெளிச்சம் பத்தடி தூரத்துக் குத்தான் தெரிந்தது. அதுவரையும்தான் பாதைதெளிவாக இருந்தது. அதற்கு அப்பால் எல்லாம் ஒரே இருளாக இருந்தது. பாதை புரியவில்லை. இவன் யோசித்துப்பார்த்தான். மனத்தினுள் ஒரு சந்தேகம். பத்தடிதூரம்தானே வெளிச்சம் தெரிகிறது. அப்படி யென்றால் நாம் பத்தடி தூரம் தானே போகமுடியும். அதற்கும் அப்பால் ஒரே இருளாகஇருக்கிறதே! அதில் எப்படி நாம் நடந்து போவது? வெகுதூரம் போய் ஆகவேண்டுமே! இது தான் அவன் மனதில் ஏற்பட்ட தயக்கம். இப்படி யோசித்துக் கொண்டே இந்தஇளம்ஆசாமி புறப்பட்ட இடத்திலேயே நின்று கொண் டிருக்கிறான். அந்தச் சமயத்தில் ஒரு வயதான பெரியவர் அந்தப்பக்கமாக வந்தார். அவர் கையில் இதைவிடச் சிறியதாக ஒரு விளக்கு வைத்திருந்தார்.

அந்த விளக்கு 5அடி தூரத்துக்குத்தான் வெளிச்சம் காட்டும் அவ்வளவுசிறிய விளக்கு. இவரும் மலைஉச்சிக்குப் போவதற்கா கத்தான் வந்தார். அவரைப்பார்த்து இவன் 'என்ன பெரியவரே! இவ்வளவு சிறிய விளக்கை வைத்துக் கொண்டுஅவ்வளவு தூரத் துக்கு எப்படி மலை ஏறப் போகிறீர்கள் ?' என்று கேட்டான். 'நீ ஏன் இப்படித் தயங்கிக் கொண்டே நிற்கின்றாய்?' என்று கேட்டார் பெரியவர். என்னிடம் இருக்கினற விளக்கு பத்தடிதூரத்துக்குத்தான் பதையைக்காட்டுகிறது என்றான்.

இப்பொழுது பெரியவர் 'தம்பி உன் கையில் இருக்கிற விளக்கு கொடுக்கிற வெளிச்சத்தை வைத்து நீ முதலில் பத்தடி தூரம் முன்னேறு! பத்தாவது அடியில் போய் நின்று கொண்டு பார். மறு படியும் ஒரு பத்தடிதூரத்துக்குப் பாதை தெரியும். இப்படி கையில் இருக்கிற விளக்கு தொடர்ந்துவெளிச்சம் காட்டிக்கொண்டே இருக்கும். நீ முன்னேற முன்னேற அந்தவெளிச்சமும் முன்னேறும். ஆதலால், எத்தனை கிலோ மீற்றர் தூரம் வேண்டும் என்றாலும் இந்தப் பத்தடி தூரவெளிச்சத்தை வைத்துக்கொண்டே போய் விடலாம் புறப்படு' என்றார்.

இப்போது தான் அந்தப் பெரியவர் சொன்னது இளைஞனுக்குப் பளிச்சென்று புரிந்தது. உடனே உற்சாகமாகப் புறப்பட்டு உச்சிக்குப் போய்ச் சேர்ந்தான். இந்தக் கதையில் இருந்து நாம் புரிந்து கொள்வேண்டியது என்ன தெரியுமா?

நீண்ட காலத் திட்டம் ஒன்று போடும்போது நமக்கு முன்னால் இருப்பதை மறந்து விட்டு, மனதைப் போட்டுக் குழப்பிக் கொள்ளக் கூடாது. உங்கள் கையில் என்ன இருக்கிறதோ, அதிலேயே உங்கள் எதிர்காலம் மறைந்திருக்கிறது. கண் முன்னால் தெரிவதை வைத்து நடைபோடஆரம்பியுங்கள். போகப்போக வழி தானாகப் புலப்படும் என்கிறார்பெரியவர் ஓஷோ. பெரிய பயணங்களையெல்லாம் இப்படித்தான் நடத்த வேண்டியிருக் கும். ஒவ்வொரு அடியாக எடுத்து வைத்தால், ஓடிப்போய்ச் சேர்ந்து விடலாம் மலைத்துப் போய் நின்றுவிட்டால் நின்று கொண்டேஇருக்க வேண்டியது தான்.

நமது ஆட்கள் எல்லோரும் மிகவும்மோசம் சார்! ஒருவன் அப்படித்தான் நீண்ட தூரப்பிரயாணம் ஒன்றுபுறப்பட்டான். ரயில் போய்க்கொண்டே இருந்தது. கொஞ்சத்தூரம் போனது. பாதி வழியில் கையில் வைத்திருந்த டிக்கற்றை காற்றில் விட்டு விட்டான். அய்யய்யோ என் டிக்கற்போய் விட்டதே என்று கத்த ஆரம்பித்து விட்டான். பக்கத்தில் இருந்த பெரியவர்அவனைப்பார்த்து பரிதாபப் பட்டு 'கவலைப்படதோதம்பி, போனால் போகிறது. வேறு டிக்கற் வாங்கிக் கொள்ளலாம்' என்று ஆறுதல் சொன்னார். அதற்கு அவன்சார்! நான்அதற்காக அழவில்லை. அந்த டிக்கற் கிடைத்தால் தான் நான் எந்த ஊருக்குப் போக வேண்டும் என்பது எனக்குத் தெரியும் என்கிறான்.

*தென்கச்சி கோ. சுவாமிநாதன்*

# பரீட்சைக்குத் தோற்றுகின்ற வருடத்திலேயே பல்கலை அனுமதி

## இவ்வாண்டு முதல் புதிய நடைமுறை

(கொழும்பு)

இவ்வருடம் தொடக்கம் க.பொ.த. (உ/த) பரீட்சையில் சித்தியடைந்த மாணவர்கள் சித்தியடைந்த அதே ஆண்டிலேயே பல்கலைக் கழகங் களுக்கு அனுமதிக்கப்படுவார்கள் என பல்கலைக்கழக மானியஆணைக் குழுவின் தலைவர் பேராசிரியர் ரஞ்சித் மெண்டிஸ் தெரிவித்துள் ளார்.

இதற்கமைய இவ்வருடம் ஏப்ரல் மாதம் க.பொ.த. (உ/த) பரீட்சைக்கு தோற்றும்மாணவர்கள் எதிர்வரும் நவம்பர் மாதம் 7ஆம் திகதி அளவில் பல்கலைக்கழகங்களுக்கு உள் வாங்கப்படவுள்ளனர்.

இவ்விடயம் தொடர்பாக கல்வி அமைச்சு பரீட்சைகள் திணைக் கள அதிகாரிகளுடனும ஏனைய உத்தியோகத்தாகளுடனும் பேச்சுவாத தைகள் நடத்தியுள்ளதாகவும் பேராசிரியர் மெண்டிஸ் தெரி வித்துள்ளார். (உ-8)

# தேசிய அரசமைக்கும் முயற்சியில் பொ.ஐ.மு.மறைமுகமாக ஈடுபடுகிறது

## ஜே.வி.பி.உறுப்பினர்கள் குற்றச்சாட்டு

(கொழும்பு)

பொதுஜன ஐக்கிய முன்னணி, ஜே.வி.பியுடன் இணைந்து ஆட்சி அமைப்பது குறித்து பேச்சுவார்த்தை நடத்தினாலும் பொதுஜன ஐக்கிய முன்னணி அரசாங்கத்துடன் சேர்ந்து தேசிய அரசாங்கம் அமைப்பது குறித்து மறைமுகமான பேச்சுவார்த்தை யில் ஈடுபடுவதற்கு ஆர்வம் காட்டி வருவதாக ஜே.வி.பியின் அரசியல் குழு உறுப்பினர்கள் குற்றஞ்சாட்டியுள்ளனர்.

ஐக்கிய தேசிய முன்னணி அரசாங்கத்தைவீழ்த்தும் நோக்கத்துடன் பொ.ஐ.முன்னணியும் ஜே.வி.பியும் நடத்தும் பேச்சுவார்த்தைகளில் இது வரை தீர்க்கமான முடிவெதுவும் எட்டப்படாதது குறித்து கடந்த வாரம் இடம் பெற்ற ஜே.வி.பியின் அரசியல் குழு கூட்டத்திலேயே அவர்கள் இவ்வாறு குற்றம் சாட்டியுள்ளனர்.

இதேவேளை, இது தொடர்பாக சமர்ப்பித்துள்ள நகல் பிரேரணை குறித்து பொ. ஐ. முன்னணியின் நிலைப்பாடு என்ன என்பது பற்றி அறியுமாறுஜே.வி.பி யின் பொதுச் செயலாளர் டில்வின் சில்வா கட்சியின் பிரசாரச் செய லாளர் விமல் வீரவன்சவிடம் பணித் துள்ளார்.

இது இவ்வாறிருக்க, ஜனாதிபதி சந்திரிகா பண்டாரநாயக்கா குமாரதுங்க தற்போது வெளிநாட்டிற்கு விஜயம் மேற்கொண்டிருப்பதால் நகல் பிரேரணை குறித்து கவனம் செலுத் துவதற்கு ஜனாதிபதிக்கு சந்தர்ப்பம் கிடைக்கவில்லை என பொ.ஐ. முன் னணியின் தரப்பில் இருந்து தெரிவிக் கப்பட்டுள்ளது. (உ-10)

# கனேடிய சமஷ்டி முறையே இலங்கைக்குப் பொருத்தமானது

## க.கா. குழுவும் இதில் உடன்பாடு

(கொழும்பு)

கடல் பிரதேசங்களில் தமிழீழ விடு தலைப்புலிகளுக்கும் கடற்படையினருக் கும் இடையே ஏற்படும் மோதல் சம்பவங் களை தடுப்பதற்கென தற்போது கலந்துரையாடல்கள் நடைபெற்று வருவதாக இலங்கை யுத்தநிறுத்தக் கணகாணிப்புக்குழுவின் பேச்சாளா சப்ஹல் ஹென் தெரிவித்துள்ளார்.

காலி மாவட்ட செயலகத்தில் நடை பெற்ற கருத்தரங்கு ஒன்றில் பங்கு பற்றி உரையாற்றும் போதே அவர் இதனைத்தெரிவித்துள்ளார்.

கிழக்கு மாகாணத்தில் தமிழீழ வடுதலைப்புலிகளின கட்டுப்பாட்டில உள்ள பிரதேசங்களை இனம் காண வரைபடம் ஒன்று தயாரிக்கப்படுகிறது என்று குறிப்பிட்ட அவர், தமிழீழ விடு தலைப்புலிகளுக்கு ஆதரவாக நோர்வே அரசு செயற்பட்டு வருகிறது என எழுந் துள்ள குற்றச்சாட்டுக்களை மறுத்தார்.

மேலும் சமரசப் பேச்சாளர் எவராக இருந்தாலும் இனப்பிரச்சினைக்கு தீர்வு காணும் பொறுப்பும் இலங்கை அரசின் கைகளில் தான் தங்கியுள்ளது.

இலங்கையைப் பொறுத்த மட்டில் கனடாவில் கடைப்பிடிக்கப்படும் சமஷ்டி வழி முறையே மிகவும் பெருத்தமானது எனத் தெரிவித்துள்ளார்.

மீண்டும் ஓர் யுத்தத்தை ஆரம்பிக் காது இலங்கைஅரசும்-தமிழீழ விடு தலைப்புலிகளும் சமாதானத்தை முன்ன கர்த்திச்செல்வதில கண்ணாக இருப்பதை யிட்டுஅவர்மகிழ்ச்சிதெரிவததார். (உ-8)

## செல்லப்பா சுவாமிகள் குருபூசை

(யாழ்ப்பாணம்)

நல்லூர் தேரடிச் செல்லப்பாசுவாமி களின் குருபூசைதினம நாளை வியா ழக்கிழமை கலை 8.30 மணிக்கு செல் லப்பாசுவாமிகளின் நினைவாலயத் தில் நடைபெறவுள்ளது.

அன்றைய தினம் தேவார திருவாசக நற்சிந்தனைப்பாடல்கள் முடிவடைந் ததும் நணபகல் மகேஸ்வர பூசையும் இடம்பெறவுள்ளது. (உ-10)

## இராசி பலன்

**02.04.2003**
**(பங்குனி 19, புதன்)**

| | |
|---|---|
| பிரதமை | பி.இ. 3.17வரை |
| ரேவதி | பி.இ. 1.30 வரை |
| இராகு காலம் | - 12.11-1.41 |
| சுபநேரம் | - 4.41-6.11 |

**மேடம்**
அமைதிக்குறைவு, தொழில் பங்கம், நல்ல உணவு கிடைத்தல், திடீர் பயணம்.

**இடபம்**
நல்ல சிந்தை, நல்ல காரியம், தொழில் இலாபம், பெருமை அடைதல்.

**மிதுனம்**
கடினஉழைப்பு, நண்பர்கள் உதவி, புதிய திருப்பம், நல்ல சம்பவம்.

**கடகம்**
மனக்கலக்கம், திடீர் நன்மை, காணிசம்பந்த மான நன்மை, இடமாற்றம்.

**சிங்கம்**
அதிகாரிகள் வெறுப்பு, வாகனபயம், காரிய தடங்கல், பணச்செலவு.

**கன்னி**
குடும்பத்தில் நல்ல காரியம், பிரயாணசுகம், செய்தொழில்வருவாய், நண்பர்கள் சந்திப்பு.

**துலாம்**
பகைவர் நேசம், நல்ல சம்பவம், எடுத்த கருமங்கள் நிறைவேறும், சத்துருஜெயம்.

**விருச்சிகம்**
புத்திரரால் கவலை, தேகசுகக்குறைவு, முயற்சி தாமதம், செய்தொழில் நன்மை.

**தனுசு**
மாதாவழி உறவு, கௌரவக்குறைவு, மந்தமான நிலை, முயற்சி தாமதம்.

**மகரம்**
கூட்டுமுயற்சி, அன்னியர் சந்திப்பு தனலாபம், குடும்பநன்மை.

**கும்பம்**
இல்லறசுகம், வீண் செலவு, கடுமையான வார்த்தை, முயற்சி தாமதம்.

**மீனம்**
புதியமுயற்சி, உறவினர் சந்திப்பு, விருந்துப சாரம், உஷ்ணநிலை.

(பழையநேரப்படி கணிப்பிடப்பட்டது)
**வளவன்.**

# கேரதீவு - சங்குப்பிட்டிப் பாதையை பாவனைக்கு விடுமாறு கோரிக்கை

(திருநெல்வேலி)

கேரதீவு-சங்குப்பிட்டி பாதை திறத்தல் தொடர்பில் இலங்கை செஞ்சிலுவைச் சங்க கிளிநொச்சி மாவட்டக் கிளை, கிளிநொச்சி, மன்னர் மாவட்டங்களில் அரச அதிபர் களுக்கு மகஜர்களை அனுப்பி வைத்துள்ளது.

அம்மகஜரில் குறிப்பிடப்பட்டிருப் பதாவது,

1990இல் தடைப்பட்டுப்போன யாழ். குடா நாட்டுக்கான தரைவழிப் பாதை ஏ-9 வீதி மீண்டும் சமாதான சகவாழ்வின் ஆரம்பமாக 08.04.2002 இல் திறக்கப்பட்டு மக்கள் மகிழ் வுடன் அன்றாடம் பயன்படுத்திவருகின் றனர். ஆயினும் 1999இல் போர் காரணமாக தடைப்பட்டுப் போனயாழ். குடா நாட்டுக்கான இன்னுமொரு தரைவழிப்பாதையான கேரதவு-சஙகுப்பிட்டி13 வருடங்களாகியும் மக்கள் போக்குவரத்துக்கு திறந்து விடப் படாமல் இருப்பதை தங்களின் மேலான கவனத்திற்கு தயவுடன் கொண்டு வருகின்றோம்.

1937ஆம் ஆண்டு அப்போதைய போக்குவரத்து இலாகா பணிப் பாளராகவும் பொறியியலாளராகவும, இருந்து மகாதேவா இத் தாம்போதி வேலைகளில் மிகவும் சிரத்தை கொண்டு செயலாற்றினார். அவரின நினைவாக இது மகாதேவா தாம் போதி என அழைக்கப்படலாயிற்று.

1937 இல் 13ஆயிரத்து700 அடியாக இருந்த கடல் இடைவெளி 1955ஆம் ஆண்டளவில் 3ஆயி ரத்து300 அடியாகக்குறைக்கப்பட்டது. பாராளுமன்றத்தில் வரவு செலவுத் திட்டம் சமர்ப்பிக்கும்போது பொது வேலை இலாகாமதிப்பீட்டில் மகாதேவா தாம் போதிக்கென10ரூபா அடையாள மானியமாக ஒதுக்குவது வழமையாக இருந்து வந்தது. காலத்துக் குக் காலம கடல் இடைவெளி குறைக்கப் பட்டு, தற்போது ஆயிரத்து300 நீள கடல் இடைவெளியே இருக்கின்றது. இதில் 630 நீளமான பாலம் கேரதீவு துறையை அண்டி அமைக்கத் திட்ட மிடப்பட்டுள்ளது.

1981இல் இருந்துவடபகுதி பாரா ளுமன்ற உறுப்பினர்கள்மேற்படி வேலைத்திட்டத்திற்கு பன்முகப்படுத் தப்பட்ட வரவு செலவுத் திட்டத்தில் 100 இலட்சம் ரூபாவை ஒதுக்கி உதவினார்கள். பிரதேச அபிவிருத்தி அமைச்சு15 இலட்சம் ரூபாவை ஒதுக்கி உதவியது. கேரதீவு பக்கம்ஆழம்11 அடி, சங்குப்பிட்டிபக்கம்ஆழம் 4' - 6' அடிஆகும்.

1981ஆம் ஆண்டு நவம்பர்மாதம் 9ம் திகதி தாம்போதி வேலைகள் மீண்டும் ஆரம்பிக்கப்பட்டபோது பெருமளவு பொதுமக்களும், பொது ஸ்தாபனங்களும் ஆர்வமுடன் சிரமதான அடிப்படையில் வேலை செய்தமை குறிப்பிடத்தக்கது.

மேற்குறித்த கேரதீவு-சங்குப் பிட்டிபாதை கிளிநொச்சி, மன்னார், யாழ்.மாவட்ட மக்களுக்கு மிக அத் தியாவசியமான குறுந்தூரபோக்கு வரத்துப்பாதையாகும். இப்பாதை வழியாகதினமும்2000(இரு வழி)பிரயா ணிகள் பயணித்து வந்துள்ளனர்.

விரைவான போக்குவரத்து ஐ.நா.சாசனப்படி அடிப்படை மனித உரிமைகளுள் ஒன்றாகும். மனிதாபி மான பிரச்சினையில் முக்கியத்துவம் வாய்ந்த இப்பாதையைமீளத்திறக்கும விடயத்தை அரசின் உடனடிக் கவனத் துக்கு கொண்டு வந்துஅடுத்து வரும் தமிழ், சிங்கள புத்தாண்டுக்கு முன் இப்பாதையைத் திறக்க நட வடிக்கை எடுக்கவேண்டும் என்று குறிப்பிடப்பட்டுள்ளது. (உ-43)

## சிறைச்சாலைத் திணைக்கள

# ஆணையாளர் நியமன இழுபறி தொடர்கிறது

(கொழும்பு)

சிறைச்சாலைத்திணைக்கள ஆணை யாளர் நாயகத்தை நியமிப்பதில், பாது காப்பு அமைச்சர் திலக்மாரப்பன விற்கும் உள்துறை அமைச்சர் ஜோன் அமரதுங்கவிற்கும் இடையில் ஏற பட்டுள்ள இழுபறி நிலையினால் கடந்த இரண்டு அமைச்சரவைக் கூட்டங்களிலும் மேற்படி விடயம் ஆரா யப்படுவது பற்றிய தீர்மானம் எதுவும் எடுக்கப்படவில்லை என தெரிவிக்கப் படுகிறது.

வத்தளை மஜிஸ்திரேட் நீதிவானை சிறைச்சாலை ஆணையாளர் நாயக மாக நியமிக்க வேண்டும் என உள் துறை அமைச்சர்ஜோன்அமரதுங்க அமைச்சரவைக்கு சிபார்சு செய்துள் ளார்.

அதேசமயம், வத்தளை மஜிஸதி ரேட் நீதிவானிலும் பார்க்க எம்பிலிப் பிட்டிய மஜிஸ்திரேட் நீதிவான் சேவைக் காலம் கூடியவர் என்றும், எனவே அவரைத்தான் நியமிக்க வேண்டும என்றும் பாதுகாப்பு அமைச்சர் திலக் மாரப்பன அமைச்சரவைக்குச் சிபார்சு செய்துள்ளார்.

இதேவேளை, சிறைச்சாலைத்திணைக களம் உள்துறை அமைச்சின் கீழ் இயங்குவதால் ஆணையாளர் நாய கத்தை நியமிக்கும உரிமையை உள்துறை அமைச்சே கொண்டிருக்க வேண்டும் என தொழில் அமைச்சர் மகிந்த சமரசிங்க தெரிவித்துள்ளார்.

ஆனாலும் தொழில் அமைச்சர் மகிந்த சமரசிங்க தெரிவித்தகருத்திற்கு சில அமைச்சர்கள் ஆட்சேபனை தெரிவித்துள்ளனர்.

இதனையடுத்து பிரதமர் ரணில் வக்கிரமசிங்க, ஜோன்அமரதுங்கவிடமும் திலக்மாரப்பன விடமும் இது தொடர்பான அறிக்கைகளைக் கோரியுள் ளார்.

அத்துடன், சிறைச்சாலை ஆணை யாளர் நாயகத்தை பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவே நியமிப்பார் என தகவல் அறிந்த வட்டாரங்கள் தெரிவித்துள்ளன. (உ-10)

நடு வின்றி நன்பொருள் வெ∴கின் குடிபொன்றிக்
குற்றமும் ஆங்கே தரும்

–குறள்–

## வலம்புரி

### ஆட்சி மாற்ற எச்சரிக்கை

தசரதன் தனது தலைமயிர் நரைத்ததை கண்ணுற்றதும் முடியாட்சியை மாற்ற வேண்டும் என்று முடிவெடுக்கிறான். அதன் விளைவாகவே இராமனுக்கு முடி சூட்டும் படலம் ஆரம்பமானது.

ஒருமனிதனின் ஆயுள் குறைந்து வருவதை நரை, திரை, மூப்பு எனும் மூன்று அறிகுறிகள் மூலம் இறைவன் நமக்கு எச்சரிக்கை செய்கிறான். எனினும் நாம் அதனை மறந்து உதாசீனம் செய்து விடுகிறோம். இதே போன்றதொரு எச்சரிக்கை ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க முதற் தடவையாக விடுத்துள்ளார். உடம்பில் ஏற்படுகின்ற நரை, திரை, மூப்பு ஆகிய மாற்றங்கள் ஆயுளின் தூரத்தை காட்டி நிற்க, ஜனாதிபதி சந்திரிகாவின் எச்சரிக்கை ஆட்சி மாற்றத்தை காட்டி நிற்கிறது. ஆம், நேற்று முன்தினம் ஜனாதிபதி மாளிகையில் இடம் பெற்ற வெளிநாட்டு இராஜதந்திரிகளுடனான சந்திப்பின்போது உரையாற்றிய ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க "யார் ஆட்சியில் இருந்தாலும் விடுதலைப் புலிகளுடனான சமாதானப் பேச்சுத் தொடரும்" எனக் கூறியுள்ளார். அவரின் கூற்று இங்கு ஆழ்ந்து நோக்குதற்குரியது.

அதாவது நான் முன்னெடுத்துச் சென்ற சமாதான முயற்சியையே ஐக்கிய தேசிய முன்னணி அரசு முன்னெடுத்துச் செல்கிறது எனக் கூறும் ஜனாதிபதி நேற்று முன்தினம் தனது வழமையான உரையை மாற்றி, யார் ஆட்சியிலிருந்தாலும் சமாதான முயற்சி தொடரும் எனக்கூறியிருப்பது ஆட்சிமாற்றத்திற்கான ஓர் அறிகுறி எனக் கொள்ளலாம்.

சமாதான. முயற்சிகள் நடைபெற்றுக் கொண்டிருக்கும் போது ஆட்சியைக் கலைத்தால் அது வெளி நாடுகள் மத்தியில் ஜனாதிபதிக்கு அவதூறை ஏற்படுத்தும் என்பதால் ஜனாதிபதி அவசரப்பட்டு தனது அதிகாரத்தை பிரயோகித்து ஆட்சியைக் கலைக்கமாட்டார் என்ற நம்பிக்கை இருந்தது.

ஆனால் அந்த நம்பிக்கையை உடைத் தெறியும் வகையில் வெளி நாட்டு இராஜதந்திரிகள் மத்தியில் ஜனாதிபதி நாசூக்காக யார் ஆட்சியில் இருந்தாலும் சமாதானப் பேச்சுத் தொடரும் எனக் கூறியுள்ளார்

இக்கூற்றின் கருத்து என்னவெனில் நான் தொடர்ந்தும் ஜனாதிபதியாக இருப்பேன் ஆனால் ஐக்கிய தேசிய முன்னணி அரசு மாற்றமுறலாம். இம்மாற்றம் ஐந்து ஆண்டுகளின் பின்பான பொதுத்தேர்தலின் போது ஏற்படும் மாற்றம் எனக் கொள்ளலாகாது. எனெனில் அதுவரை ஜனாதிபதி சந்திரிகா ஆட்சியில் இருக்கமாட்டார்.

எனவே ஆட்சி மாற்றம் என்பது தான் ஜனாதிபதியாக இருக்கும் போது ஏற்படுவதையே குறிப்பிட்டுள்ளார்.

அவ்வாறாயின்ஐ.தே முன்னணி அரசுக்கு ஆபத்து என்ற எச்சரிக்கையாக ஜனாதிபதியின் உரையை எடுத்துக் கொள்ளலாம்.

# முதலாவது உலக மகா யுத்தத்தின் போது ஈராக்கில் தமிழர்கள் போரிட்டுள்ளனர்

சுமார் 90 ஆண்டுகளுக்கு முன்னர் இப்போதைய தமிழ் நாட்டைச் சேர்ந்த இராணுவ வீரர்கள் பலர் ஈராக்கிற்குச் சென்று போரிட்டிருக்கிறார்கள். அவர்கள் ஈராக்கின் பக்தாத் நகரை பிரிட்டிஷ் படைகள் பிடிப்பதில் உரிய பங்காற்றியிருக்கிறார்கள். இது பலருக்கும் தெரிந்திருக்க நியாயமில்லை. இவ்வாறு போரிட்ட தமிழர்களின் வாரிசுகளுக்கு வேண்டுமானால் இது தெரிந்திருக்கலாம்.

முதலாவது உலகப் போரின் போது (1914- 1918) இது நடந்தது. அப்போது துருக்கிய சாம்ராஜ்யத்தைத் தாக்குவதற்காகச் சென்ற பிரிட்டிஷ் படைகளின் ஒரு பகுதியாக இந்திய இராணுவப் படையினரும் சென்றனர். அப்படிச் சென்ற இந்திய இராணுவப் படைப்பிரிவில் தமிழ் நாட்டைச் சேர்ந்தவர்கள் பலர் இருந்தனர்.

இப்படிச் சென்ற தமிழர்கள் பின்னர் இராணுவத்திலிருந்து ஓய்வு பெற்ற பிறகு, ''அந்தக் காலத்தில் நாங்கள் மெசப்பத்தோமியாவில் சண்டையிட்ட போது...'' என்று தொடங்கி தங்களது அனுபவத்தை விவரிப்பவர்களாக இருந்தனர்.

அவர்கள் ''மெசப்டோமியா'' என்று குறிப்பிட்டது இன்றைய ஈராகையை ஆகும். ஒரு காலத்தில் ஈராக் நாட்டுக்கு மெசபடோமியா என்ற பெயர் இருந்தது. அது கிரேக்கர்கள் வைத்த பெயர். ''மெசபடோமியோ என்றால் நதிகள் ஓடும் நாடு என்று அர்த்தம். ஈராக்கின் வடபகுதியில் (யூப்ரடீஸ், டைக்ரீஸ் ) இரு பெரிய நதிகள் ஓடுகின்றன. இந்த இரு நதிகளுக்கிடையிலான பிரதேசம் மிகச் செழிப்பானது.

ஈராக் என்ற பெயரிலான தனி நாடு 1921ஆம் ஆண்டில் தான் தோன்றியது. பல நூற்றாண்டுக் காலம் அது துருக்கிய சாம்ராஜ்யத்தின் ஒரு பகுதியாகவே இருந்தது. ஈராக் நாடு மட்டுமன்றி இப்போதைய சிரியா, லெபனான், ஜோர்டான், இஸ்ரேல், சவுதி அரேபியா முதலான நாடுகளும் துருக்கிய சாம்ராஜ்யத்தில் அடங்கியிருந்தன.

''முதல் உலகப் போர் தொடங்கிய போது துருக்கி நாடானது ஜேர்மனியின் பக்கம் சேர்ந்து கொண்டது. துருக்கியின் வழியே ஜேர்மனி முன்னேறியதால் இந்தியாவுக்கும் ஆபத்து ஏற்படலாம். தங்களிடம் இருந்து இந்தியா பறிபோய்விடலாம் என்று பிரிட்டன் அஞ்சியது. ஆகவேதான் துருக்கியைப் பின்புறத்தில் இருந்து தாக்க இந்தியாவிலிருந்து தங்களது படைகளை அனுப்பினர் அந்த வகையில்தான் பிரிட்டிஷ் படைகளின்கீழ் பணிபுரிந்த இந்திய ராணுவத்தினரும் அனுப்பப்பட்டனர்.

மெசப்பத்தோமியா போரில்

**என்.ராமதுரை**

பிரிட்டிஷ் படைகள் முதலில் (1915) தோற்ற போதிலும் பின்னர் வென்றன. 1917-ல் பாக்தாக் பிடிபட்டது. உலகப்போரின் முடிவில் துருக்கியின் வசம் இருந்த நாடுகளில் சிலவற்றை பிரிட்டனும் பிரான்ஸும் பங்கு போட்டுக் கொண்டன.

ஈராக் அந்த ஏற்பாட்டின் கீழ் பிரிட்டிஷ் ஆட்சிப் பொறுப்பின் கீழ் வந்தது. துருக்கிக்கு எதிரான சண்டையில் ஈராக்கியரும், பிரிட்டனுடன் சேர்ந்து போரிட்டனர். ஆகவே தங்களுக்கு அளிக்கப்பட்ட வாக்குறுதிப்படி பூரண சுதந்திரம் வழங்கப்படலாம் என்று ஈராக்கியர் எதிர்பார்த்தனர். அப்படி நடக்கவில்லை. ஏமாந்த ஈராக்கியர் புரட்சியில் ஈடுபட்டனர்.அதை அடக்க இந்தியாவில் இருந்து பிரிட்டிஷ் படைகள் சென்றன. பின்னர் பிரிட்டன் சற்று இறங்கி வந்து ஈராக்கியருக்கு சுயாட்சி உரிமை வழங்க ஒப்புக் கொண்டது. இந்த ஏற்பாட்டின் கீழ் ஈராக்கில் மன்னர் ஆட்சி ஏற்படுத்தப்பட்டது. அப்படி மன்னர் ஆனவர் ஈராக்கியரே அல்ல. சவூதி அரேபியாவிலிருந்து வந்தவரே. மன்னர் ஆட்சியின் முக்கிய அதிகாரங்கள் பிரிட்டிஷ் ஆலோசகர்கள் வசமே இருந்தன. அந்த கால கட்டத்தின் ஈராக்கில் பணி புரிய இந்திய அதிகாரிகளும் இங்கிருந்து அனுப்பப்பட்டனர். 1932-தான் ஈராக்கிற்கு முழு சுதந்திரம் கிடைத்தது. இதற்குள் ஈராக்கில் பெற்றோலிய எண்ணெய் கண்டுபிடிக்கப்பட்டது. பிரிட்டிஷ் எண்ணெய்க் கம்பெனிகள் காலூன்றின.

ஈராக்கை அடுத்தடுத்து ஆண்ட மன்னர்கள் மேற்கத்திய நாடுகளைச் சார்ந்து நின்றனர். நாட்டில் பல்வேறு காரணங்களால் அடிக்கடி குமுறல்கள் தோன்றின. 1958-ல் ராணுவப் புரட்சி ஏற்பட்டு மன்னர் இரண்டாம் பைசால் தூக்கிலிடப்பட்டார். அதன் பிறகு ஏற்பட்ட அரசுகள் எதுவும் நிலையாக இருக்கவில்லை. 1979-ம் ஆண்டில் சதாம் ஹுசைன் அதிபரானார்.

அப்போதில் இருந்து அவரது ஆட்சி நீடிக்கிறது. சதாம் பதவிக்கு வந்த மறு ஆண்டில் ஈராக்-ஈரான் போர் தொடங்கி 8ஆண்டுக் காலம் நீடித்தது. அக்கால கட்டத்தில் ஈராக்கிற்கு அமெரிக்கா பல வகையிலும் உதவியது. அப்போது சதாம் செய்த பல தவறுகளை அமெரிக்கா கண்டு கொள்ளவில்லை.

அது தனிக்கதை. 1990-ல் சதாம் ஹுசைன் குவைத்திற்கு சொந்தமான தீவுகளை கைப்பற்றியதுடன் நிறுத்திக் கொண்டிருந்தால் ஈராக் - அமெரிக்க உறவுகளில் பெரிய மாற்றம் ஏற்படாமல் போயிருக் கலாம்.

இப்போது சதாம் ஹுசைன் ஆட்சியை அகற்றி அந்நாட்டில் ஜனநாயக அரசை ஏற்படுத்தப போவதாக அமெரிக்க ஆட்சியாளர்கள் கூறுகின்றனர். ஈராக்கை சுற்றியுள்ள அரபு நாடுகள் பெரும்பாலானவற்றில் ஜனநாயகம் என்பது அபூர்வவஸ்து மற்ற அரபு நாடுகளில் ஜனநாயகம் இல்லாதது பற்றி கவலைப்படாத அமெரிக்கா குறிப்பாக ஈராக்கில் ஜனநாயகத்தை ஏற்படுத்தவே போர் நடத்துகிறோம் என்று கூறுவது நம்பத்தக்கதாக இல்லை.(பி)

# இளைஞனுக்கு உதவுக



(யாழ்ப்பாணம்)

படத்தில் காணப்படும் இருபாலை கிழக்கு இருபாலையைச் சேர்ந்த 26 வயதுடைய இளைஞன் செபமாலை அலஸ்ான் என்பவரின் இரண்டு கால்களும் நோய்த் தாக்கத்திற்கு உட்பட்டு செயலிழந்த நிலையில் இருப்பதால் எழுந்து நடமாட முடியாத நிலைமை ஏற்பட்டுள்ளது.

இந் நிலையில் கொழும்பு தேசிய வைத்திய சாலையில் சிகிச்சைக்குட்படுத்திய போது,உடன்டியாக சத்திர சிகிச்சை செய்ய வேண்டும் என்று வைத்திய நிபுணர்கள் கூறியுள்ளனர்.

இச் சத்திர சிகிச்சையை மேற் கொள்வதற்கு 2லட்சத்து 56 ஆயிரம் ரூபா தேவைப் படுவதாக **EUSO/HEALTH CARE INTERNATIONAL** நிறுவனம் தெரிவித்துள்ளது.இந் நிலையில் சத்திர சிகிச்சையை மேற் கொள்வதற்குரிய பணமில்லா நிலையில்,வறிய குடும்பத்தைச் சேர்ந்த பிரஸ்தாப இளைஞனுக்கு உதவும் வகையில் கோப்பாய் லயன்ஸ் கழகம் முன்வந்துள்ளதுடன் கழகத்தின் சார்பில் நிதிசேகரிப்பு நடவடிக்கைக்காக பரோபகாரிகளிடம் நிதியுதவி கோரப்பட்டுள்ளது.

வயோதிப தாய் தந்தையர்கள் நான்கு பெண் சகோதரிகளைக் கொண்ட குடும்பத்தைச் சேர்ந்த பிரஸ்தாப இளைஞனுக்கு சத்திர சிகிச்சை அளிக்க உதவுவதன் மூலம் அவருக்கு மறு வாழ்வளிக்கும் மனித நேயப் பணியைச் செய்ய பாராளுமன்ற உறுப்பினர்கள்,வர்த்தகர்கள்,தொண்டர் அமைப்புக்கள்,சமய நிறுவனங்கள்,அரச சார்பற்ற நிறுவனங்கள் மாணவ சமூகத்தவர்கள் மற்றும் பொது மக்கள் தர்ம சிந்தனையுடன் முன்வருமாறு கேட்கப்பட்டுள்ளது.

இவ் மனிதாபிமான உதவியைச் செய்ய விரும்பும் அன்பர்கள் நிறுவனங்கள் நேரடியாகவோ அல்லது கோப்பாய் லயன்ஸ் கழகமூடாகவோ பிரஸ்தாப இளைஞனின் மக்கள் வங்கி ஸ்ரான்லி றோட் யாழ்ப்பாணம். 030-207-037420-9 என்ற சேமிப்புக் கணக்கு இலக்கமூடாகவோ நிதியுதவி வழங்குமாறு கேட்கப்படுகின்றனர்.

(இ)

## காணாமல் போனோர் பற்றிய விசாரணை நாளை ஆரம்பம்

(யாழ்ப்பாணம்)

குடாநாட்டில் 1996 - 1997-ம் ஆண்டு காலப்பகுதியில் காணாமல் போனோர் தொடர்பான விசாரணைகள் மேற்கொள்வதற்கு குற்றப்புலனாய்வுப் பிரிவு பொலிஸ் அத்தியட்சகர் நிஸந்த பெரேரா தலைமையிலான குழுவினர் நேற்று யாழ்ப்பாணம் வருகை தந்துள்ளனர்.

இக்குழுவினர் நாளையும் நாளை மறுதினமும் யாழ்ப்பாணம் பொலிஸ் நிலையத்திலும் எதிர் வரும் 5-ம் திகதி சனிக்கிழமை சாவகச்சேரி பொலிஸ் நிலையத்திலும், எதிர் வரும் 6ம் திகதி ஞாயிற்றுக்கிழமை மானிப்பாய் பொலிஸ் நிலையத்திலும் விசாரணைகளை மேற்கொள்ளவுள்ளனர்.

விசாரணைக்கு சமுகமளிக்கும் முறைப்பாட்டுக்காரர்கள் பொலிஸ் முறைப்பாட்டுக் பிரதி, காணாமற் போனவரின் நிழற்படம்,இறப்புச் சான்றிதழ் இருந்தால்அதனையும் கொண்டு வருமாறு கேட்கப்பட்டுள்ளனர்.முறைப்பாட்டுக் காரர்கள் அல்லது சாட்சிக் காரர்கள் வெளிநாடு சென்றிருந்தால் உறவினர்கள் அது தொடர்பாக விசாரணைக்குழுவுக்கு அறிவிக்குமாறும், முறைப்பாட்டுக்காரர்கள் விசாரணைக்கு தவறாது சமுகம் தருமாறும் பொலிஸ் அத்தியட்சகர் கேட்டுள்ளார்.

கீழே பெயர் குறிப்பிட்டுள்ள காணாமற் போனோர் 13பேரினதும் உறவினர்கள்,யாழ்ப்பாணம் பொலிஸ் நிலையத்திற்கு விசாரணைக்கு அழைக்கப்பட்டுள்ளனர்.அவர்களின் பெயர் விபரம் வருமாறு;

அருளானந்தம் சார்ல்ஸ் 50/3 ராசலிங்கம் வீதி,யாழ்ப்பாணம்,கந்த சாமி சிவகுமார்.கச்சேரி நல்லூர் வீதி,யாழ்ப்பாணம்,கந்தையா தியாக ராஜா 17/5 பண்டாரிக்குளம் வீதி நல்லூர்,ரெஜினோ ரூபிராஜ் சேவேந்திரதாஸ் நல்லூர் யாழ்ப்பாணம்,வரெஜிரோட் குலசேகரம் ராஜசிங்கம் வீதி குருநகர், செல்வநாயகம் சுகந்தன் நாவலர் வீதி,யாழ்ப்பாணம்,வில்பிரட் நிக்ஸன் ஜொட் நல்லூர் யாழ்ப்பாணம்,கே.ரொஷான் கொழும்புத்துறை யாழ்ப்பாணம், ஜீவராணி யோகராஜா கொழும்புத்துறை யாழ்ப்பாணம்,எம்.மதிகரன் அரியாலை,யாழ்ப்பாணம்,எஸ்.சண்முகலிங்கம் அரியாலை,யாழ்ப்பாணம். எஸ்.வசந்தகுமார்அரியாலை,ரி.எஸ். ஜேம்ஸ் சதோஸ் குருநகர். (த)

### திைசரி தியானம்

## ஆச்சாரியர் வழிபாடு

இறைவனைஅடைய வாழ்க்கையில் ஆச்சாரியரை (முனிவர்)த் தொழுதல் என்பது இன்றியமையாத சாதனையாக கொள்ளப்படுகிறது. உப நிடதங்கள இறைவனிடத்தில் கொண்டுள்ள ஈடுபாட்டினை ஆச்சார்யர்களிடத்திலும் கொள்ளவேண்டும் என்று அறிவிக்கின்றன. ஒருவர் தீய வழிகளிலிருந்தும் விலகித்தம் ஆச்சாரியாவது வகையிலே தம்மை உருவாக்கிக் கொண்டு ஆச்சார்யரையே நினைந்து நினைந்து நேர்மையான வழியில் செல்லவேண்டும் என்பது இதன் கருத்தாகும். உருவமற்ற இறைவனை ஆச்சாரியாரின்உருவமாக கண்டு அவரை வழிபாடு செய்யுங்கள்

**சுவாமி சிவானந்தர்**

### தவக்கால நற்சிந்தனை

**ஆண்டவர் இரக்கமும் கனிவும் உடையவர்**

பல ஆண்டுகளாய் .குடிப்பழக்கத்தையும், மற்றகெட்ட பழக்கங்களையும் உடைய தன் மகனை சபித்து கொள்ள முடியாத தாய் சினங்கொண்டு என்னை அம்மா என்று கூப்பிட்டு என்மானத்தை வாங்காதே நீ என் பிள்ளை என்று சொல்லிக் கொள்ள உனக்கு அருகதையில்லை நான் உன் அம்மாவும் இல்லை, நீ என் மகனும் இல்லை என ஆவேசத்துடன் கூறினாள் நல்லன செய்பவர்களை எல்லோரும் தன் பிள்ளையாக ஏற்றுக்கொள்ளுவர் தீயன செய்பவனை தன் பிள்ளையாக இருந்தாலும் ஏற்றுக்கொள்ள மறுப்பர் யேசு தன் தந்தையின் சாயலையும் எண்ணங்களையும் செயற்பாடுகளையுமே தன்னுடையதாக கொண்டு வாழ்ந்தார் எனவே தந்தையாக கடவுளை கூறி தன்னைக் கடவுளுக்கு இணையாக்கியது முறையே ஆகவே யேசுவின் வார்த்தையைக் கேட்பவர் இயேசுவையும் அதன் வழியாக கடவுளையும் மதிக்கிறார். நமது செயல்களும் எண்ணங்களும் நாம் கடவுளின் பிள்ளை என்பதை பிரதிபலிக்கின்றனவா?

**காவலன்**

# அயர்லாந்து எம்.பி.ஜோண்யுங் நாளை வன்னி செல்கிறார்

(கொழும்பு)

அயர்லாந்துப் பாராளுமன்ற உறுப்பினர் ஜோண்யுங் நேற்று ஐந்து நாள் விஜயம் ஒன்றை மேற் கொண்டு இலங்கைக்கு வருகை தந்துள்ளார்.

சமாதானத்திற்கான நோபல் பரிசைப் பெற்ற இவர் இலங்கையின் சமாதான முயற்சிக்கு ஊக்கமளிக்கும் வகையிலேயே இலங்கைக்கு விஜயம் மேற்கொண்டுள்ளார்.

ஜனாதிபதி,பிரதமர்,அமைச்சர்கள் ஆகியோரைச் சந்திக்கத் திட்டமிட்டுள்ள இவர் நாளை வன்னிக்கு விஜயம் செய்து விடுதலைப் புலிகள் அரசியல் துறைப் பொறுப்பாளர் சு.ப.தமிழ்ச்செல்வனைச் சந்தித்து பேச்சு நடத்தவுள்ளார். (இ)

---

## தாயுடன் ...

ஓடிச் சென்று அயலவர்களுக்குத் தெரிவித்து அவர்களின் உதவியுடன் குளத்தில் காணாமல் போனவர்களைத் தேடினர்.

இத்தேடுதலின் போது தாய் மயக்கமுற்ற நிலையில் மீட்கப்பட்டார். ஏனைய மூன்று சிறுமிகளும் நீண்ட நேரத்தின் பின் சடலமாக மீட்கப்பட்டனர். மயங்கிய நிலையில் மீட்கப்பட்ட தாய் உடனடியாக யாழ். போதனா வைத்திய சாலைக்குக் கொண்டு செல்லபபட்டு அங்குஅதி தீவிர சிகிச்சைப் பிரிவில் அனுமதிக்கப்பட்டுள்ளார். அவர் ஆபத்தான கட்டத்தைத் தாண்டி விட்டதாக வைத்தியசாலை வட்டாரங்கள் தெரிவித்தன. நடராசா ஜெயலக்சுமி (வயது46) என்பவரே வைத்திய சாலையில் அனுமதிக்கப்பட்டவராவார்.

இச் சம்பவத்தில் ஒரே குடும்பத்தைச் சேர்ந்தவர்களான நடராசா செமிலா (வயது8), நடராசா சத்தியா (வயது12) பாலகிருஷ்ணன் சிந்துஜா (வயது 6)சிறுமிகளே உயிரிழந்தவர்களாவார்.

உயிரிழந்த சிறுமிகளின் சடலங்கள் ஊர்காவற்துறை வைத்திய சாலைக்குக் கொண்டு செல்லப்பட்டன. இச்சடலங்கள் இன்று காலை யாழ். போதனா வைத்தியசாலைக்கு பொலிஸாரினால் கொண்டு வரப்படவுள்ளது.

இதேவேளை உயிரிழந்த பாலகிருஷ்ணன் சிந்துஜா என்பவர் நடராசாவின் சகோதரியின் மகள் என்பதும் குறிப்பிடத்தக்கது.இச் சம்பவத்தினால் அப்பகுதி சோகத்தில் மூழ்கியுள்ளது. (த-6)

## முத்தமிழ் விழா

(யாழ்ப்பாணம்)

கோப்பாய் ஆசிரியர் கலாசாலை முத்தமிழ் மன்றம் நடத்தும் முத்தமிழ் விழா இன்றும் நாளையும் கலாசாலை கலை அரங்கில் நடைபெறவுள்ளது.

இன்றைய விழா மு.ப.9 மணிக்கு ரதிலக்சுமி மண்டபத்தில் துணைத் தலைவர் செல்வி ச.நாகதாரணி தலைமையில் நடைபெறவுள்ளது.

இவ் நிகழ்விற்கு நாடக அரங்கக் கல்லூரி இயக்குநர் கலாநிதி குழந்தை ம.சண்முகலிங்கம் பிரதம விருந்தினராகவும் யாழ்.மாவட்ட தமிழீழக் கல்விக் கழகப் பொறுப்பாளர் கை.கவியன்பன் கௌரவ விருந்தினராகவும் கலந்து கொள்ளவுள்ளனர். (ந-5)

---

## லங்கா முடித்த ...

டன் நடத்தப்பட்ட தாக்குதலாகத் தெரிய வில்லை. ஒரு சிறிய படகு பெரிய கப்பல் ஒன்றைத் தாக்குவதானது போர் நிறுத்தத்தை தளம்பச் செய்வதற்கான ஒரு செயலாகவே எமக்குப்படுகின்றது.

### ஐ.ஆர்.ஏ.யில் இருந்து பிரிந்த றியல் ஐ.ஆர்.ஏ.போல்..

இருப்பினும்,இத் தாக்குதல் சம்பவத்திற்குப் பின்னால் சமாதான வழியில் விடுதலைப் புலிகள் தற்போது அரசுடன் காண விளைகின்ற தீர்வு விடயத்தை எதிர்க்கின்ற விடுதலைப் புலிகளின் ஒரு பிரிவினர் இப்படிச் செய்திருக்கலாம் என்ற ஒரு அபிப்பிராயமும் எமக்குள் எழுந்துள்ளது.

இதனை அரச படையினர் நம்புவதாகத் தெரியவில்லை. விடுதலைப்புலிகளின் ஒரு பிரிவினர் இத்தகைய செயல்களில் ஈடுபட்டார்கள் என்ற நிலையில் இதனை எடுத்துப் பார்த்தால் வட அயர்லாந்தில் ஐ.ஆர்.ஏ. போராட்டக்குழு போர் நிறுத்தத்திற்குப் பிற்பாடு அதற்கு எதிராக பிரிந்து சென்ற ஒரு குழுவினர் றியல் ஐ.ஆர்.ஏ.என்ற பெயருடன் தாக்குதல்களை நடத்தி வந்தனர். இம் மாதிரியான ஓர் சந்தர்ப்பம் இலங்கையிலும் ஏற்படுவதற்கு வாய்ப்புள்ளது. இத்தகைய தாக்குதல்கள் வடுதலைப் புலிகளுக்கும் இலங்கை அரசுக்கும் இடையே இருக்கின்ற நம்பிக்கையைப் பாதிப்பதுடன் சர்வதேசத்தின் கவனம் எல்லாம் போர் நிறுத்தத்தில் ஈடுபட்டிருக்கும் போது விடுதலைப் புலிகள் பிரச்சினைகளை கிளப்பப் பார்க்கிறார்கள் என்று அரச ஆதரவாளர்கள் சநதேகிக்கின்றார்கள்.

### போர் நிறுத்தத்திற்கு எதிரான பொது எதிரியை முறியடிக்க வேண்டும்

இத்தகைய நடவடிக்கைகள் வருங்காலத்தில் அரசுக்கும் விடுதலைப் புலிகளுக்குமிடையில் நடைபெறாமல் இருப்பதற்குரிய வழிவகைகளைக் கண்டு. ஆராயும் படியான தகவல்களை அரசுக்கும் புலிகளுக்கும் தெரிவிக்கவுள்ளோம். அடுத்த சுற்றுப் பேச்சுவார்த்தைக்கு முன் அரசுடனும் புலிகளுடனும் தொடர்பு கொண்டு அவர்களுடன் சேர்ந்து வேலை செய்யவுள்ளோம என்று. கூறிய கண்காணிப்புக் குழுத் தலைவர் இத் தாக்குதலை நடத்தியது அரசோ அல்லது விடுதலைப் புலிகளோ சம்பந்தப்படாத ஒரு குழுவாக இருக்குமாக இருந்தால் போர் நிறுத்தத்தைக் குழப்பும் பொது எதிரிக்கு

# மின்கட்டணம்செலுத்தாதோரின் மின் இணைப்பு துண்டிக்கப்படும்

## அமைச்சர் கரு ஜெயசூரிய எச்சரிக்கை.

(கொழும்பு)

மின் கட்டணத்திற்கான பற்றுச்சீட்டுக்கள் வழங்கப்பட்டு 30 நாட்களுக்குள் குறிப்பிட்ட தொகையை செலுத்தத் தவறுவோரின் மின் இணைப்புக்கள் துண்டிக்கப்படும் என மின்சக்தி எரிசக்தி அமைச்சர் கரு ஜெயசூரிய தெரிவித்துள்ளார்.

குறிப்பிட்ட காலத்தில் பணத்தை கட்டத்தவறும் பட்சத்தில் மேலதிக கட்டணமாக நிலுவைத் தொகையில் 10வீதம் அறவிடப்படு மெனவும் நேற்று பராளுமன்றத்தில் அவர் தெரிவித்துள்ளார்.

இதேவேளை மின்இணைப்புக் கட்டணமாக 800ரூபாவும் பொருட்கள் சேவைகள் வரியாக 20 வீதமும் அறவிடப்படும் என்றும் அவர் தெரிவித்துள்ளார்.

மின் இணைப்பை துண்டிப்பதற்கும் வழங்குவதற்கும் செலவுகள் ஏற்படுவதனால் இந்தக் கட்டணங்கள் நீக்கப்பட மாட்டாது எனவும் அவர் மேலும் தெரிவித்துள்ளார். (இ-5)

---

## முகாம் அமைப்பதை .

ஆரம்பிககப்படும். இவ் எதிர்ப்பு நடவடிக்கை தொடர்பாக இன்று பிற்பகல் 4மணிக்கு யாழ்.பல நோக்கு கூட்டுறவுச் சங்க கேட்போர் கூடத்தில் ஒருங்கிணைப்புக்குழு கூடி ஆராயவுள்ளது.

இது தொடர்பாக ஏற்கனவே தெரிவு செய்யப்பட்ட ஒருங்கிணைபபுக்குழு போராட்ட நடவடிக்கைகளை முன்னெடுத்துச் செல்லும் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ம)

## விபத்தில் படுகாயம்

(யாழ்ப்பாணம்)

எட்டு வயதுச் சிறுவன் ஒருவன் ஹயஸ் வானினால் மோதுண்டு படு காயம் அடைந்த நிலையில் யாழ். போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளான்.

புன்னாலைக் கட்டுவன் ஈவினைப் பகுதியில் நேற்று மாலை இடம் பெற்ற இச் சம்பவத்தில் அதே இடத்தைச் சேர்ந்த தேவகுமார் தேவநேசன் என்ற சிறுவனே காயமடைந்தவராவார். (த-6)


**அரிய சந்தர்ப்பம்!**

மொபி ஸ்டார் நிறுவனத்தின் அதிகாரம் பெற்ற,யாழ்.மாவட்டத்தின் ஏக விநியோகஸ்தாகளான றெயின்போ லிங்ஸ் (*Rainbow Links*) வழங்கும்

**மொபிடெல் தொலைபேசி இணைப்புகள்.**

குறைந்த விலையில் கையடக்கத் தொலைபேசிகள் மொபிடெல் இணைப்புடன்
மேசைத் தொலை பேசிகள்
*அனைத்திற்கும் ஒருவருட உத்தரவாதம்.*

| | |
|---|---|
| Ericsson - 1228d | 8800/- |
| Ericsson - LX/KF 788 | 9200/- |
| Motorola - M 70A | 6800/- |
| Motorola - 650 | 7000/- |
| Star TAC | 7500/- |
| Nokia - 918 | 8000/- |
| Nokia - 3360 | 16000/- |
| Microtel (Land Phone) | 16000/- |

**Rainbow Links**


## வலம்புரி — சங்குநாதம்

### எழுத்தாளர் சபை

### அங்குரார்ப்பண வைபவம்

காலம்: 05.04.2003 சனிக்கிழமை காலை 10.30 மணி
இடம் : வலம்புரி கேட்போர் கூடம்
தலைவர்: திரு.சி.வெற்றிவேலாயுதம்
*(நிர்வாக இயக்குநர்,வலம்புரி)*
பிரதம விருந்தினர்:மூத்த இலக்கிய கர்த்தா
*பேராசிரியர் செ.சிவஞானசுந்தரம்(நந்தி)*
சிறப்பு விருந்தினர்:உயர்திரு.என்.சரவணபவன்
*(பிராந்திய முகாமையாளர்,யாழ்.ரெலிகொம்)*
ஆசியுரை: அருட்திரு ரூபன் மரியாம்பிள்ளை அடிகளார்
*(பிரதம ஆசிரியர்.பாதுகாவலன்)*
பேராசிரியர் பொ.பாலசுந்தரம்பிள்ளை
*(முன்னாள் துணைவேந்தர்,*

பேராசிரியர் பொ.பாலசுந்தரம்பிள்ளை
(முன்னாள் துணைவேந்தர்,
யாழ்.பல்கலைக்கழகம்)

வரவேற்புரை: கவிஞர் சு.துரைசிங்கம்
(ஓய்வுபெற்ற அதிபர், ஆசிரிய பீடம் வலம்புரி)

சிறப்புரை: மூத்த எழுத்தாளர் கலாநிதி க.குணராசா
(செங்கையாழியான்)

கருத்துரை:

எழுத்தாளர் அறிமுகம்:

நன்றியுரை: திரு.மு.வாமதேவன்
(செய்தி ஆசிரியர், வலம்புரி)

எழுத்தாளர் சபைக்கு விண்ணப்பித்தவர்களையும் ஆர்வலர்களையும் கலந்து கொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

15.வெள்ளாந்தெரு,
யாழ்ப்பாணம்.
(யாழ். வைத்தீஸ்வரக் கல்லூரி அருகாமை)

வலம்புரிக் குடும்பம்

இருந்தால் போர் நிறுத்தத்தைக் குழப்பும் பொது எதிரிக்கு எதிராக அரசும் விடுதலை புலிகளும் சேர்ந்து செயற்பட வேண்டியது மிக அவசியமான ஒரு தேவையாகும் என்றும் அவர் தெரிவித்துள்ளார். (ம-8)


**Rainbow Links**
Hospital Road Junction,
First Cross Street,
Jaffna.
Tel.222 3170 (C/5899)


## 5ம்தர புலமைப்பரீட்சை
## வினாத்தாள் - 10

மாணவர் முழுப்பெயர்.........................................................
பாடசாலையின் பெயர் :.........................................................
வீட்டின் முகவரி:.........................................................

மாணவர்களே உங்கள் விடைகளை 09.04.2003 க்கு முன் அனுப்பி வைக்கவும். உங்கள் விடைகளுக்கு இக்கூப்பனையும் வெட்டி இணைக்கவும்.

அனுப்பவேண்டிய முகவரி

**வலம்புரி, கல்விப்பகுதி**
**15, வெள்ளாந்தெரு,**
**யாழ்ப்பாணம்.**


ஒவ்வொரு திங்கட்கிழமைகளிலும்
வலம்புரியின் வாரமலர்

**சங்குநாதம்**

* அரசியல் கட்டுரைகள்
* அறிவியல் ஆக்கங்கள்
* கவிதைக் கலசம்
* வியாசரின் பதில்கள்
* மகளிர் உலகம்
* சிறுவர் அரங்கம்
* ஊர்காவற்துறையில் படுகொலை
(திகிலூட்டும் உண்மைச் சம்பவம்)

இன்னும்
தமிழுலகின் தலைசிறந்த எழுத்தாளர்
செங்கை ஆழியான் எழுதும்
**ஈழராஜா எல்லாளன்**
தொடர்கதை
வாசிக்கத் தவறாதீர்கள்

திங்கள் வைகறையில் உங்கள் உள்ளங்களில் ஒலிப்பது

**சங்குநாதம்**



இப் பத்திரிகை வலம்புரி அன். கோ ஸ்தாபனத்தாரால் இல.15 வெள்ளாந்தெரு, யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 02.04.2003 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.